**அல்லாஹ்வின் கட்டளை**

وَمَنْ اَحْسَنُ دِيْنًا مِّمَّنْ اَسْلَمَ وَجْهَهٗ لِلّٰهِ وَهُوَ مُحْسِنٌ وَّاتَّبَعَ مِلَّةَ اِبْرٰهِيْمَ حَنِيْفًا ؕ وَاتَّخَذَ اللّٰهُ اِبْرٰهِيْمَ خَلِيْلًا

அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்து நன்மை செய்பவராகி, இப்றாஹீமின் நேரான மார்க்கத்தைப் பின்பற்றுகிறவரை விட அழகான மார்க்கத்தையுடையவர் யார்? அல்லாஹ் இப்றாஹீமைத் தன் நெருங்கிய நண்பராக ஆக்கிக் கொண்டான். (4:126)

بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 5

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

இதழ் 50

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

24 ரபீவுஸ் ஸானீ 1442 ஹிஜ்ரி கமரி 10 ஃபதஹ் 1399 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக்
10 டிசம்பர் 2020


**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**இன்ன மருந்து பயனளிக்கும் என்று எந்தவொரு மருத்துவரும் வாதம் செய்ய முடியாது. அவ்வாறில்லையென்றால் பிறகு ஏன் ஒருவர் மரணிக்கின்றார்? வைத்தியர்களும் மருத்துவர்களும் இறையச்சமுடையவர்களாகி விட வேண்டும். சிகிச்சையும் செய்யுங்கள். துஆவும் செய்யுங்கள். தனிமையில் துஆ செய்யுங்கள்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றிலிருந்து...

### காரணிகளை பயன்படுத்துவது தடை செய்யப்படவில்லை

நமது ஷரீஅத்தில் காரணிகளை பயன்படுத்துவதற்கு தடையில்லை. நாங்கள் மருத்துவம் செய்யலாமா? என்று ஒருவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்டார். அதற்கு அன்னார் (ஸல்) அவர்கள், ஆம்! சிகிச்சை செய்து கொள்ளுங்கள். சிகிச்சை இல்லாத எந்த நோயும் இல்லை என்று கூறினார்கள். ஆயினும் இன்ன மருந்து பயனளிக்கும் என்று எந்தவொரு மருத்துவரும் வாதம் செய்ய முடியாது என்பது முற்றிலும் உண்மையாகும். அவ்வாறில்லையென்றால் பிறகு ஏன் ஒருவர் மரணிக்கின்றார்? வைத்தியர்களும் மருத்துவர்களும் இறையச்சமுடையவர்களாகி விட வேண்டும். சிகிச்சையும் செய்யுங்கள். துஆவும் செய்யுங்கள். தனிமையில் துஆ செய்யுங்கள். எவர்கள் ஆணவம் கொண்டார்களோ இறைவன் அவர்களையே இழிவுபடுத்தியுள்ளான்.

ஜாலநியூஸ் என்பவர் வயிற்றுப்போக்கை கட்டுப்படுத்தி விடுவதாக பெரிதும் வாதம் செய்தார். இறைவனுடைய அடையாளத்தின் காரமணாக அவர் அதே நோயால் மாண்டு போனார் என்று எழுதப்பட்டுள்ளது. அதேபோன்று சில மருத்துவர்கள் ஆணவம் கொண்டு இந்த உலகை விட்டு சென்று விட்டார்கள்.

### அல்லாஹ்வின் மீதே முழுமையான நம்பிக்கை வைக்க வேண்டும்

இறைவன் அவர்களின் வாதங்களின் உண்மைத்துவத்தை வெளிப்படுத்தி விட்டான். மேலும் அவன் தற்பெருமைகளை தூள்தூளாக்கி விட்டான் என்றே நான் இதிலிருந்து கூற வருகிறேன். வாதம் செய்தவர்கள் அந்த வாதத்திலேயே தோற்றுப் போனார்கள். வாதம் செய்யக்கூடாது என இதிலிருந்து தெரிய வருகிறது. எனது மறைந்த மர்ஹூம் தந்தையார் அவர்களும் மிகவும் பிரபலமான மருத்துவராக இருந்தார்கள். ஐம்பது ஆண்டு கால அனுபவம் இருந்தது. உறுதியான மருந்து என்று எதுவும் இல்லை என்று அவர்கள் கூறி வந்தார்கள். உண்மையும் அதுதான். அல்லாஹ்வின் ஆதிக்கம் எப்போதும் நிலை நிற்கின்றது. இறைவன் பக்கம் கவனம் செலுத்தக்கூடியவர் நற்பாக்கியசாலி ஆவார். கஷ்டங்களில் தற்பெருமை கொள்ளக்கூடாது. அல்லாஹ் அல்லாதவற்றின் மீது நம்பிக்கை கூடாது. திடீரென மறைவான நோய்கள் கடுமையாகி விடுகின்றன. சில முறை இதயத்திற்கு சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கும்போதே மூளையில் பாதிப்பு வந்து விடுகின்றது. சில முறை குளிருக்கான அம்சங்களுக்கு சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கும்போதே வெப்பம் அதிகரித்து விடுகின்றது. யார் இதை முடிவு செய்ய முடியும்? இறைவன் மீதே நம்பிக்கை வைக்க வேண்டும். இந்த பூமி மற்றும் வானங்களின் ஆபத்துகளை யாரால் எப்போது எண்ண முடியும்?

நோய்களையும் கூட எண்ணிவிட முடியாது. கண்களுக்கு மட்டுமே 3000 நோய்கள் இருப்பதாக எழுதப்பட்டுள்ளது. சில நோய்கள் எப்படிப்பட்டதாக இருக்கின்றதென்றால் மருத்துவர் மருந்தை எழுதி முடித்திருக்க மாட்டார். அதற்குள் நோயாளியின் கதை முடிந்து விடுகின்றது. அந்த அளவிற்கு நோய் மேலோங்கி விடுகின்றது. எனவே அல்லாஹ்வின் பாதுகாப்பிலேயே வந்து விட வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 232 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## நபிமொழி

ஹஸ்ரத் அம்ர் பின் தக்லிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சில செல்வங்கள் அல்லது பொருட்கள் கொண்டு வரப்பட்டன. அன்னார் அதனை பங்கிட்டு கொடுத்தார்கள். அன்னார் சில நபர்களுக்கு கொடுத்தார்கள். சிலருக்கு கொடுக்கவில்லை. எவர்களுக்கெல்லாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கொடுக்கவில்லையோ அவர்கள் அதிருப்தி அடைந்ததாக அன்னாருக்கு செய்தி வந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வை புகழ்ந்தார்கள். பின்னர் கூறினார்கள்: அம்மா பஃது. அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் ஒருவருக்கு வழங்குகின்றேன். (மேலும் ஒருவரை விட்டு விடுகின்றேன்) இன்னும் சொல்வதென்றால், நான் யாருக்கு கொடுக்கின்றேனோ அவரை விட நான் விட்டு விடுகின்ற நபர் எனக்கு மிகவும் அன்பிற்குரியராக இருக்கின்றார். ஆனால் சிலரின் உள்ளங்களில் நிம்மதியின்மையும், பொறுமையற்றத் தன்மையும் இருப்பதைக் கண்டு அவர்களுக்கு கொடுத்து விடுகிறேன். மேலும் சிலரை அல்லாஹ் அவர்களின் உள்ளங்களில் ஏற்படுத்தியுள்ள போதுமென்ற மனம் மற்றும் நன்மையின் வசம் ஒப்படைத்து விடுகிறேன். அத்தகைய நபர்களில் ஒருவராகவே அம்ர் பின் தக்லிப் அவர்களும் இருந்தார்கள். (அன்னார் கூறி வந்தார்கள்): இறைவன் மீது ஆணையாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த விஷயத்திற்கு எதிராக எனக்கு சிவப்பு ஒட்டகம் கிடைப்பதை நான் ஒருபோதும் விரும்பவில்லை.

(சஹீஹ் புகாரி தொகுதி 2 பாடம் அல்ஜுமுஆ – 2006 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

**எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு**


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அல்லாஹ்வின் ஏகத்துவம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியின்கீழ் உலகத்தை கொண்டு வர வேண்டும் என்ற இந்த முயற்சியையே நாம் செய்ய வேண்டும். இதுவே தஹ்ரீகே ஜதீதின் நோக்கமுமாகும்**

**இந்த வருடம் உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு தஹ்ரீகே ஜதீதின் பொருளாதார அமைப்பில் 14.5 மில்லியன் அதாவது "ஒரு கோடியே நாற்பத்தைந்து லட்சம்" பவுண்ட் தியாகம் செயவதற்கான நற்பாக்கியம் கிடைத்துள்ளது. இந்த வசூலானது கடந்த ஆண்டை விட எட்டு லட்சத்து அறுபத்து இரண்டாயிரம் பவுண்ட் அதிகமாகும்**

**எனது கவனத்தை பெறுவதற்காகவும், எனது திருப்தியை பெறுவதற்காகவும் கலப்பற்றவராக திகழ்ந்து நீங்கள் செலவு செய்தால், நான் உங்கள் அச்சத்தை அகற்றுவேன். உங்களது கவலையையும் நான் அகற்றி விடுவேன். உங்களுக்கு மன அமைதிக்கான ஏற்பாட்டையும் செய்வேன். நான் உங்களை எனது மடியில் எடுத்துக் கொள்வேன் என்று அல்லாஹ் உங்களுக்கு வாக்குறுதி அளிக்கின்றான்**

**தியாகம் செய்வதன் நோக்கம் இறை திருப்தியை பெறுவதாக இருக்குமென்றால் பிறகு அல்லாஹ்விடத்தில் தியாகங்கள் ஒப்புக் கொள்ளப்படுகின்றன**

**தஹ்ரீகே ஜதீதின் 86 ஆம் ஆண்டின் வெற்றிகரமான அருக்குரிய நிறைவடைதல் மற்றும் 87 வது ஆண்டின் ஆரம்பம் தொடர்பான அறிவிப்பு**

**உலத்தில் வசிக்கக்கூடிய பல்வேறு சமுதாயங்களுடன் தொடர்புடைய அஹ்மதி ஆண்கள், பெண்கள், குழந்தைகள் மற்றும் புதிய அஹ்மதிகளின் தியாகத்தின் தன்னிகரற்ற உதாரணங்களும், அதன் விளைவாக ஏற்பட்ட இறை அருட்களின் நற்குறிப்பும்**

**தற்போதைய நிலைமையில் இஸ்லாமிய உலகிற்காகவும் , முஸ்லிம்களுக்காகவும் துஆ செய்ய அறிவுரை**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 06 நவம்பர் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **06 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ بِالَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

எவர்கள் இரவிலும், பகலிலும், மறைவாகவும், வெளிப்படையாகவும் தங்களது செல்வத்தை செலவிடுகின்றார்களோ அவர்களுக்குரிய கூலி அவர்களின் இறைவனிடம் உள்ளது. அவர்களுக்கு எவ்வித அச்சமும் இருக்காது. அவர்கள் கவலையடையவுமாட்டார்கள். (2:275)

திருக்குர்ஆனில் அல்லாஹ் பல்வேறு இடங்களில் நம்பிக்கையாளர்களுக்கு பொருள் தியாகத்தின் பக்கம் கவனமூட்டியுள்ளான். இந்த வசனத்திலும் நாம் பார்க்கின்றோம். இதில் நம்பிக்கையாளர்களின் இந்த சிறப்பம்சம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதாவது நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்வின் வழியில் இரவும், பகலும் செலவிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மறைவாகவும் இந்த செலவை செய்கின்றனர். வெளிப்படையாகவும் செலவிடுகின்றனர்.

அல்லாஹ்வின் பார்வையில் இந்த இரண்டு வழிமுறைகளும் ஒப்புக் கொள்ளப்படக்கூடிய அந்தஸ்தை பெறுகின்றன. அதாவது மறைவாக செலவிடுவதும், வெளிப்படையாக செலவிடுவதும் ஒப்புக் கொள்ளப்படுகிறது. ஏனென்றால் அல்லாஹ் பிரிதொரு இடத்தில் கூறுகின்றான்: அல்லாஹ்வின் வழியில் செலவு செய்வதற்கான நம்பிக்கையாளர்களின் எண்ணம் என்பது அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காகவே அமைகின்றது. அல்லாஹ் அதனை இவ்வாறு குறிப்பிடுகின்றான்.

وَمَا تُنْفِقُوْنَ اِلَّا ابْتِغَآءَ وَجْهِ اللّٰهِ (2:273)

அதாவது அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக அவர்கள் செலவிடுகின்றனர். அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக அன்றி, அவர்கள் ஒருபோதும் செலவிடுவதில்லை. அதாவது அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதே அவர்களின் நோக்கமாக உள்ளது.

எனவே ஒரு உண்மையான நம்பிக்கையாளரின் அடையாளம் என்னவென்றால், அவர் நன்மையை மேற்கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் வழியில் தனது தூய செல்வத்திலிருந்து செலவிட வேண்டும். இரவும், பகலும் நன்மையை செய்வதற்கான கவலை இருக்க வேண்டும். சில நேரத்தில் வெளிப்படையாகவும் நன்மை செய்ய வேண்டும். சில முறை மறைவாகவும் நன்மை செய்ய வேண்டும். சில முறை வெளிப்படையாகவும், பொருள் தியாகம் செய்ய வேண்டும். சில முறை மறைவாகவும் பொருள் தியாகம் செய்ய வேண்டும். இந்த தியாகங்கள் அல்லாஹ்விடத்தில் ஒப்புக் கொள்ளப்பபடுகின்றன. ஆனால் நிபந்தனை என்னவென்றால், இந்த தியாகங்களை செய்வதன் நோக்கம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதாக இருக்க வேண்டும்.

ஒருவேளை பிறருக்கு காட்டுவதற்காக இந்த தியாகங்கள் இருக்குமென்றால் பின்னர் அந்த தியாகங்கள் அல்லாஹ்விடத்தில் ஒப்புக் கொள்ளப்படுவதற்கான அந்தஸ்தை பெற முடியாது. பிறருக்கு காட்டுவதற்காக தியாகங்கள் செய்யக்கூடியவர்களின் தியாகங்கள் அவர்களின் முகத்திலேயே வீசப்படும். எனவே இந்த உயிரோட்டத்தை கண் முன் நிறுத்தியவாறு ஒரு நம்பிக்கையாளர் தியாங்களை செய்ய வேண்டும். இந்த உயிரோட்டத்தை கருத்தில் கொண்டவாறு ஜமாஅத் உறுப்பினர்கள் அல்லாஹ்வின் அருளால் பொருள் தியாகம் செய்கின்றனர். இந்த உயிரோட்டம் இல்லையென்றால் பின்னர் நமது தியாகங்கள் பயனற்றதாகும். மேலும் வீணாகக்கூடியதாகும்.

இந்த நபர் இவ்வளவு தியாகம் செய்திருக்கின்றார். நான் அவரை விட அதிகமாக தியாகம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்திற்காக பொருள் தியாகம் செய்யப்படும் என்றால் பின்னர் அது பயனற்றதாகும். அல்லது இன்ன ஜமாஅத் நம்மை விட பொருள் தியாகத்தில் முன்னேறிவிடக்கூடாது. அவ்வாறு முன்னேறி விட்டால் நம்மை பற்றி மக்கள் என்ன கூறுவார்கள்? என்பதற்காக பொருள் தியாகம் செய்யக்கூடாது. நன்மைகளில் போட்டியிடுதலின் ஆன்மா நிச்சயமாக நல்ல விஷயம்தான். ஆனால் நம்மைப் பற்றி மக்கள் என்ன கூறுவார்கள்? என்ற எண்ணம் இருக்கக் கூடாது. மாறாக, அல்லாஹ்வின் பார்வையில் நாம் இவர்களை விட அதிகமாக பொருள் தியாகம் செய்யக்கூடியவராக இருக்க வேண்டும் என்ற எண்ணமே இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் பின்னர் அது நன்மைகளில் முந்துதல் என்பதற்கான

உயிரோட்டமாக அமையும். அவ்வாறின்றி நான் இவ்வளவு சந்தா கொடுக்கின்றோன் என்று பெருமையுடன் மக்களுக்கு கூறுவதற்காக சந்தா கொடுப்பது அல்லது ஏதாவது ஒரு கருத்து வேறுபாட்டின்போது நான் இவ்வளவு பொருள் தியாகம் செய்யக்கூடியவனாக இருக்கின்றேன். எனவே எனது கருத்து ஏற்கப்பட வேண்டும் அல்லது இந்த சலுகை எனக்கு வழங்கப்பட வேண்டும் என்று ஜமாஅத் அமைப்பிடம் தனது நன்மையை சுட்டிக் காட்டுவதற்காக சந்தா கொடுப்பது அல்லது நான் இவ்வளவு பொருள் தியாகம் செய்து காலத்தின் கலீஃபா அல்லது பொறுப்பாளர்களின் பார்வையில் வந்து விட வேண்டும். மேலும் நான் புகழப்படுவேன் என்று எண்ணம் கொள்வது ஆகிய இந்த அனைத்து விஷயங்களும் தவறாகும். பயனற்றதாகும். வீணானதாகும். மேலும் தியாகத்தின் உயிரோட்டத்திற்கு எதிரானதாகும். மாறாக, நஷ்டத்திற்கு காரணியாக அது அமையும்.

அல்லாஹ் கூறுகின்றான்: இந்த அனைத்து விஷயங்களும் தவறாகும். எனது வழியில் செலவிட வேண்டுமென்றால் பின்னர் எனது திருப்தியை பெறுவது மட்டுமே ஒரே நோக்கமாக இருக்க வேண்டும். ஆயினும் அல்லாஹ்வின் திருப்தியை பெறக் கூடியவர்களுக்கு அல்லாஹ் கண்ணியமும் வழங்குகின்றான். ஆனால் அந்த கண்ணியம் அவரை பணிவிலும், தாழ்மை குணத்திலும் முன்னேறக்கூடியதாக இருக்க வேண்டும். இன்னும் சொல்வதென்றால், மக்கள் அவரை புகழ்வதும் காலத்தின் கலீஃபாவின் பார்வையில் வருவதும் அவருக்கு வெட்கத்திற்குரியதாக இருக்க வேண்டும். ஆசை இருக்குமென்றால் அவர்கள் தமக்காக துஆ செய்ய வேண்டும். மேலும் ஒரு உறுதியான தொடர்பு உருவாகி விட வேண்டும் என்பதற்காகவே அந்த ஆசை இருக்க வேண்டும்.

இயல்பான விஷயம் என்னவென்றால், எந்த நபரிடத்தில் பைஅத் செய்திருக்கின்றோமோ அவரின் துஆக்களிலிருந்து பங்கு பெற வேண்டும் என்ற ஆசை மனிதனுக்கு இருக்கும். உண்மையான கிலாஃபத்தின் மீது நம்பிக்கை இருக்குமென்றால் பின்னர் அது போன்ற ஆசையில் எந்த தவறும் இல்லை. ஆனால் நிய்யத் பிறகுக்கு காட்டுவதற்காக இருக்கக்கூடாது. மாறாக, நான் இறைவனின் திருப்தியைப் பெற வேண்டும். மேலும் எனது இந்த தியாகத்தின் காரணமாக நான் மேலும் இறைவனின் நெருக்கத்தை பெறக்கூடியவனாக ஆகுவதற்கு காலத்தின் கலீஃபா எனக்காக துஆ செய்ய வேண்டும். மேலும் நான் அல்லாஹ்வின் திருப்தியை பெறக்கூடியவானாக ஆகிவிட வேண்டும் ஆகிய எண்ணங்களே நிய்யத்தாக இருக்க வேண்டும். எனவே இந்த சிந்தனையும் அல்லாஹ்வின் போதனைக்கு ஏற்புடையது ஆகும்.

அல்லாஹ் கூறுகின்றான்: எனது கவனத்தை பெறுவதற்காகவும், எனது திருப்தியை பெறுவதற்காகவும் கலப்பற்ற தன்மை கொண்டவராக திகழ்ந்து செலவிடுகின்றபோது எனது வாக்குறுதி என்னவென்றால், நான் உங்களது அச்சத்தை போக்கி விடுவேன். உங்களது துன்பத்தையும் அகற்றி விடுவேன். உங்களின் உள்ளத்திற்கு அமைதிக்கான ஏற்பாட்டைச் செய்து விடுவேன். உங்களுக்கு ஆறுதல் வழங்குவேன். உங்களை நான் எனது மடியில் அமர்த்திக் கொள்வேன்.

அல்லாஹ்வின் மார்க்கத்திற்காக பொருள் தியாகம் செய்ய வேண்டும். அல்லாஹ்வின் அருளால் இக்காலகட்டத்தில் காலத்தின் இமாமை, வாக்களிக்கப்பட்ட மஸீஹை மற்றும் மஹ்தியை மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை ஒப்புக் கொண்டுள்ளவர்களிடமே இந்த எண்ணம் உள்ளது. அதன் பிறகு அல்லாஹ்வும் அவர்களின் பொருள் தியாகத்திற்கு கனிகளை வழங்காமல் விட்டுவிடுவதில்லை. அல்லாஹ்வின் திருப்தியை பெற வேண்டும் என்பதற்காகவே அல்லாஹ்வின் வழியில் அவர்கள் செலவிடுகின்றனர். ஆனால் அல்லாஹ் சில நேரத்தில் உடனுக்குடன் அவர்களுக்கு அருளுகின்றான். அல்லது சில முறை செல்வத்தின் வடிவிலும், சில முறை வேறொரு அன்பளிப்பின் வடிவிலும் அருளுகின்றான். மேலும் அதற்கான உதாரணத்தை நாம் அனுதினமும் நமது ஜமாஅத்தில் பார்த்து வருகின்றோம். 10,20 அல்லது நூற்றுக்கணக்கான உதாரணங்கள் அல்ல. மாறாக, ஆயிரக்கணக்கில் அந்த உதாரணங்கள் உள்ளன. இன்னும் கூறப்போனால் லட்சக்கணக்கான உதாரணங்கள் உள்ளன என்றே நான் கூறுவேன். அல்லாஹ்வின் திருப்தியை பெறக்கூடியவர்கள் அதுபோன்ற சம்பவங்களை கடந்தே செல்கின்றனர். மேலும் தம்முடன் நடக்கின்ற அவ்விஷயங்களை அவர்கள் பார்க்கவும் செய்கின்றனர். அதன் மூலம் அவர்களின் ஈமானிய உறுதி முன்னேற்றமடைகின்றது.

நிச்சயமாக பொருள் தியாகம் செய்யக்கூடிய இவர்கள் இதனையும் கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது அவர்களின் மனைவி, மக்களுக்கும் உரிமைகள் உள்ளன. அந்த உரிமைகளை வழங்குவதும் ஒரு நம்பிக்கையாளரின் கடமையாகும். தனது மனைவி, மக்களின் உரிமையிலிருந்து அவர்களை விலக்கி வைப்பதும், அவர்களின் தேவைகளை முழுமை செய்யாமல் இருப்பதும் பாவமாகும். ஆயினும் இதனையும் நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது தனது குடும்பத்தினருக்கு போதுமென்ற மனதை உருவாக்கியவாறு போதுமென்ற மனதின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து அவர்களுக்கு அதற்கான உணர்வை ஊட்டி பொருள் தியாகத்தின் பக்கம் கவனமூட்ட வேண்டும். பின்னர் அந்நிலையில் அதுபோன்ற நபர்களின் பிள்ளைகள் அல்லாஹ்வின் அருட்களுக்கு எந்த அளவிற்கு வாரிசுகளாகி விடுகின்றனர் என்றால் மனிதன் ஆச்சரியத்திற்குள்ளாகி விடுகின்றான்.

பொருள் தியாகம் செய்யக்கூடியவர்கள் மீது தியாகத்தின் காரணமாக அல்லாஹ் எவ்வாறு அருள் செய்தான்? அல்லது செல்வத்தை செலவிடுவதன் பக்கம் அல்லாஹ்வின் புறமிருந்து தூண்டுதல் நிகழ்ந்த பிறகு அல்லாஹ் அவர்களுக்கு எவ்வாறு அருளினான் என்பதற்கான சில சம்பவங்களை தற்போது நான் எடுத்துரைப்பேன். இந்த சம்பவங்களை எடுத்துரைப்பதால் சில முறை இதனால் இந்த பயன் கிடைக்கின்றது. அதாவது அதன் மூலம் மற்றவர்களுக்கும் உந்துதல் ஏற்படுகின்றது. மேலும் இந்த சம்பவங்கள் எங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தின. எங்களுக்கும் பொருள் தியாகம் செய்வதற்கான உந்துதல் ஏற்பட்டது. பின்னர் நாங்களும் அல்லாஹ்வின் அருட்களின் காட்சிகளை கண்டோம் என சிலர் எனக்கு கடிதமும் எழுதுகின்றனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் கூறுகின்றது. நீங்கள் உங்களது அனைத்து பணிகளையும் மக்களிடமிருந்து மறைக்காதீர்கள். மாறாக, சில நுட்பங்களை அடிப்படையாகக் கொண்டு உங்களின் நற்செயல்களை மறைமுகமாகவும் மேற்கொள்ளுங்கள். மறைமுகமாக செய்வது உங்களது நஃப்ஸிற்கு சிறந்தது என்பதை நீங்கள் உணர்ந்தால் மறைமுகமாக செய்யுங்கள். மேலும் சில செயல்களை வெளிப்படையாகவும் செய்யுங்கள். அதாவது நன்மைகளை வெளிப்படுத்துவதால் பொது மக்களுக்கு நன்மை உள்ளது என நீங்கள் கண்டால் நன்மைகளை வெளிப்படையாக செய்யுங்கள். ஏனென்றால் அதன் மூலம் உங்களுக்கு இரண்டு மடங்கு நற்கூலி கிடைக்கும். மேலும் பலவீனமான மக்கள் உங்களை பின்பற்றி இந்த நன்மையை செய்து கொள்ளட்டும்.

அன்னார் கூறினார்கள்: வெறும் கூற்றினால் மக்களுக்கு புரிய வைக்காமல் செயலினாலும் மக்களுக்கு உந்துதலை ஏற்படுத்துங்கள். ஏனென்றால் எல்லா இடங்களிலும் பேச்சு தாக்கத்தை ஏற்படுத்தாது. மாறாக, பெரும்பாலான இடங்களில் முன்னுதாரணம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

(கிஷ்தி நூஹ், பக்கம் 31,32, ரூஹானீ கஸாயின் தொகுதி 19)

எனவே நான் எடுத்துரைக்கும் சம்பவங்களை அல்லது எடுத்துரைக்க இருக்கும் சம்பவங்களை கூறும்படி எனக்கு மக்கள் எழுதுவதில்லை. மாறாக, இந்த முன்னுதாரணங்களின் நல்ல தாக்கம் மக்கள் மீது ஏற்பட வேண்டும் என்பதற்காக நான் சுயமாக எடுத்துரைக்கிறேன். இன்னும் சொல்வதென்றால், நீங்கள் எங்களது சம்பவங்களை எடுத்துரைக்க வேண்டும் என்றால் கூட எங்களது பெயரை குறிப்பிட வேண்டாம் என சிலர் எனக்கு எழுதி விடுகின்றனர்.

எவ்வாறிருப்பினும் நான் தற்போது சில சம்பவங்களை எடுத்துரைக்கின்றேன். எவர்களுடன் இந்த சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதோ அவர்களுக்கு இந்த சம்பவங்கள் இரட்டை நற்கூலிக்கு காரணியாக அமைய அல்லாஹ் வழி செய்வானாக. ஒரு நற்கூலி என்னவென்றால், அவர்கள் அல்லாஹ்வின் வழியில் தியாகம் செய்துள்ளனர். மற்றொன்று, அவர்களின் இந்த முன்னுதாரணம் மற்றும் சம்பவத்தின் காரணமாக மற்றவர்களுக்கும் பொருள் தியாகம் செய்வதற்கான உந்துதல் ஏற்பட்டது அல்லது ஏற்படும். மேலும் பொருள் தியாகத்திற்கான புரிதலும் அவர்களுக்கு ஏற்பட்டது அல்லது ஏற்படும்.

பைஅத் செய்த பிறகு அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக பொருள் தியாகம் செய்வதற்கு எந்த அளவுக்கு துடிப்பு ஏற்படுகின்றது என்பதைப் பற்றி அல்பானிய்யா முபல்லிக் ஸமது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: 2020 ஆம் ஆண்டு மாநாட்டில் நிறைவுரை இருந்தது. நான் அல்லாஹ்வின் அருட்களைப் பற்றி ஜல்ஸாவில் சொற்பொழிவு நிகழ்த்தியிருந்தேன். அது தொடர்பாக அல்பானியா முபல்லிக் ஸமது சாஹிப் எழுதுகிறார்கள்: ஒரு அல்பானிய நண்பர் இந்த சொற்பொழிவை கேட்டுக் கொண்டிருந்தார். அவர் பெயர் ஜாஃபர் கோச்சி ஆகும். நான் அதில் அவர் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்ட சம்பவத்தைப் பற்றியும் கூறியிருந்தேன்.

முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்: ஆகஸ்ட் வரை அவருக்கு எந்த வருமானமும் இல்லாமல் இருந்தது. ஒரு நாள் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு அவர், மற்ற அஹ்மதி இளைஞர்கள் கொடுக்கின்ற சந்தாக்களைப் பற்றிய விவரங்களை எனக்கும் கூறுங்கள் என்று கேட்டார். எனவே மீண்டும் சந்தாவைப் பற்றி அவருக்கு எடுத்துரைக்கப்பட்டது. அதற்கு முன்பும் அவருக்கு கூறப்பட்டிருந்தது. அதன் பிறகு அவர் கூறினார்: நடப்பு மாதம் அவரது வீடு வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. அந்த வாடகை வசூலாகியும் விட்டது. அவர் அந்த முதல் வருமானத்திலிருந்து அளவை விட அதிகமாக சந்தாவை எடுத்துக் கொண்டு வந்தார்.

பின்னர் கூறினார்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ள அளவுகோலுக்குப் பிறகு எஞ்சியுள்ள தொகையை தஹ்ரீகே ஜதீது மற்றும் வக்ஃபே ஜதீது சந்தாவில் செலுத்தி விடுங்கள். நான் பொருள் தியாகம் செய்யக்கூடியவர்களுக்கு பல மடங்கு வழங்குவேன் என அல்லாஹ் திருக்குர்ஆனில் வாக்குறுதி வழங்கியுள்ளான் என்று அப்போது நான் அவரிடம் கூறினேன்.

அதற்கு அவர் கூறினார்: நான் இந்த எண்ணத்தில் சந்தா கொடுக்கவில்லை. நான் அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காகவே சந்தா கொடுத்தேன். மேலும் மார்க்கத்திற்காக பொருள் தியாகங்கள் செய்யுங்கள் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிகாட்டல் உள்ளது. எனவே நான் சந்தா கொடுத்தேன். மேலும் மார்க்கத்திற்காக பொருள் தியாகம் செய்ய வேண்டும் என்பது இஸ்லாத்தின் கட்டளையாகும். அதனால் நான் சந்தா கொடுத்தேன் என்று அவர் கூறினார். மேலும் தற்போது ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து அவர் சந்தா செலுத்தி வருகின்றார். ஆக, உலக மக்களின் இந்த எண்ணம் திடீரென மாறிவிடுகின்றது.

அர்ஜென்டினாவின் முபல்லிக் சர்வர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: அர்ஜன்டினாவில் கரோனா வைரஸ் மற்றும் பொதுவான பண வீக்கத்தின் காரணமாக பொது மக்கள் பெரும் பொருளாதார கஷ்டங்களுக்கு ஆளாகியுள்ளனர். இருந்தபோதிலும் அல்லாஹ்வின் வழியில் செலவிடுவது இஸ்லாத்தின் கட்டளைகளில் ஒரு கட்டளையாகும். அந்த இறை கட்டளைகளின்படி செயல்படுவதற்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தில் அமைந்துள்ள கிளைகளில் ஒரு கிளை தஹ்ரீகே ஜதீது சந்தாவாகும் என புதிய அஹ்மதிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. அப்போது புதிதாக பைஅத் செய்த உள்ளூரைச் சார்ந்த நண்பர்கள் போட்டி போட்டுக் கொண்டு தமது தகுதிக்கேற்ப பொருள் தியாகம் செய்தனர்.

அவர்களில் ஃபாத்திமா வேரோனிக்கா சாஹிபா என்பவரும் ஒருவர் ஆவார். அவருக்கு அசாதாரண தியாகம் செய்வதற்கு நற்பாக்கியம் கிடைத்தது. அவர் விதவை ஆவார். தொழில் அடிப்படையில் அவருக்கு குறைந்த வருமானமே உள்ளது. ஆண்டு முடிவடைய சில நாட்களே எஞ்சியுள்ளன என்று ஒட்டுமொத்தமாக புதிதாக பைஅத் செய்த நபர்களுக்கு கூறப்பட்டது.

முபல்லிக் சாஹிப் கூறுகிறார்கள்: அப்போது அவர் எனக்கு தூதுச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்தார். அதில், தற்போது எனக்கு ஆற்றல் இல்லை. ஆனால் எதிர் வரும் சில நாட்களில் கொஞ்சம் தொகையை நான் செலுத்தி விடுவேன் என்று அவர் கூறினார். எனவே சில நாட்களுக்குப் பிறகு அன்னார் 5000 அர்ஜென்டைன் பைசூஸ் அவர் கொடுத்து விட்டார். அவரது தகுதிக்கேற்ப அவர் கொடுத்தார். இன்னும் சொல்லப்போனால், அர்ஜென்டினா நாட்டின் பொதுவான பொருளாதார சூழலை பார்க்கும்போது அது அசாதாரண தொகையாக இருந்தது.

முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்: நான் அன்னாரது இந்த உணர்வைக் கண்டு உங்களுக்கு நன்றி கூறுகின்றேன் என்று கூறினேன். அப்போது இதில் நன்றி கூறுவதற்கு என்ன உள்ளது? நான் இஸ்லாத்தை மன மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டேன். அதனைப் புரிந்தே ஒப்புக் கொண்டேன். மார்க்கத்திற்காக தியாகங்கள் செய்யப்பட வேண்டும் என்பது அதன் கட்டளைகளில் ஒரு கட்டளையாகும் என்று அவர் கூறினார். நான் எனது பணிகளின் மும்முரத்தின் காரணமாக என்னால் மார்க்கத்திற்காக நேரத்தை தியாகம் செய்ய முடியவில்லை. ஓர் அஹ்மதி முஸ்லிமிற்கு என்ன பொறுப்பு உள்ளதோ அந்த அளவிற்கு என்னால் நேரத்தை தியாகம் செய்ய முடியவில்லை. அதனை எண்ணி நான் வெட்கப்படுகின்றேன் என்று அவர் கூறினார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தில் முழுமையான நன்றியுணர்வுடன் இணைபவர்களிடத்தில் இந்த புரட்சியை அல்லாஹ் ஏற்படுத்தி இருக்கின்றான். அல்லாஹ்வின் திருப்தியை எவ்வாறு பெற வேண்டும்? மேலும் அதற்காக என்ன முயற்சி செய்ய வேண்டும்? மேலும் எவ்வாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூதுச் செய்தியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற உணர்வை அல்லாஹ் அவர்களிடம் ஏற்படுத்துகின்றான்.

இந்தோனேஷியா உலகின் மற்றுமொரு முனையாகும். அமீர் சாஹிப் எழுதுகின்றார்: டேங்ரேங் என்ற நகரத்தில் முர்ஸிலா என்ற பெண்மணி இருக்கின்றார். கொரோனா காரணமாக அவரது கணவர் வேலை இழந்து விட்டார். அவர் வியாபாரம் ஒன்றை தொடங்கினார். ஆனால் அதில் லாபம் கிடைக்கவில்லை. பின்னர் ஆன்லைன் மோட்டர் சைக்கிள் டாக்ஸி கம்பெனியில் பணி செய்யத் தொடங்கினார். அதிலும் அதே கஷ்டங்களையே எதிர்கொண்டார். எந்த அளவுக்கு நிலைமை ஏற்பட்டதென்றால், அடுத்த நாள் உண்பதற்கு எதுவும் கிடைக்குமா? கிடைக்காதா? என்று சிந்தித்து வருகிறார். ரமலானில் தஹ்ரீகே ஜதீது வாக்குறுதியை முழுமை செய்து விட வேண்டும் என்பது எங்களது ஆசையாக இருந்தது என (அவரது) மனைவி கூறுகிறார். வாக்குறுதி

## திருக்குர்ஆனிலிருந்து...

அந்த ஊர்களில் வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் நம்பிக்கை கொண்டு (இறை) அச்சத்தை மேற்கொண்டிருந்தால் நாம் வானத்திலிருந்தும், பூமியிலிருந்தும் அவர்கள் மீது அருள்களின் வாயில்களைத் திறந்திருப்போம். அனால் அவர்கள் (நபிமார்களைப்) பொய்ப்படுத்தினர். எனவே நாம் அவர்களது செயல்களின் காரணமாகத் தண்டனையைக் கொண்டு பிடித்தோம். (7:97)

S.S.H.Muhammed Lebbai (Sec.Taleem, Melapalayam)

முழுமையாகி விட வேண்டும் என்பதற்காக துஆ செய்யும்படி என்னிடம் எனது கணவர் கூறியிருந்தார்.

அவரது மனைவி கூறுகிறார்: நான் ரமலானில் கனவு ஒன்று கண்டேன். அதில் ஒரு நபர் நீங்கள் வாக்குறுதி எதுவும் செய்திருக்கின்றீர்களா? என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான், ஆம் என்று கூறினேன். அப்போது அந்த நபர் அப்படி என்றால் அந்த வாக்குறுதியை முழுமை செய்யுங்கள் என்று கூறினார்.

நான் கண் விழித்தபோது தஹஜ்ஜுத் தொழுகைக்கான நேரமாக இருந்தது. தஹஜ்ஜுத் தொழுகைக்குப் பிறகு சஹரி நேரத்தில் நான் அந்த கனவைப் பற்றி எனது கணவரிடம் கூறினேன். சில நாட்களுக்குப் பிறகு எனது கணவர் வீட்டிற்கு வந்தார். மேலும் ஒரு பெரும் தொகையை என்னிடம் கொடுத்து விரைவாக சென்று தஹ்ரீகே ஜதீது வாக்குறுதியை முழுமை செய்து விடு என்று மகிழ்ச்சியுடன் என்னிடம் கூறினார்.

எனது கணவர் ஆன்லைன் மோட்டர் சைக்கிள் டாக்ஸி தொழிலில் கிடைத்த லாபமான 50000 இந்தோனேஷியன் பணத்தை பெறுவதற்காக வங்கிக்கு சென்றபோது அவரது கணக்கில் அதை விட 20 மடங்கு அதிகமான தொகை இருப்பதை அவர் கண்டார். இந்த பணம் எங்கிருந்து வந்தது என்பது எங்களுக்குத் தெரியாது. ஆயினும் இது அல்லாஹ்வின் உதவியாகவே இருந்தது. அவன் எங்களது எண்ணத்தைக் கண்டு இந்த அருளை எங்கள் மீது செய்தான் என்று தான் நம்புவதாக அந்தப் பெண்மணி கூறுகின்றார். இவ்வாறு அல்லாஹ் கவலைகளிலிருந்தும், துன்பங்களிலிருந்தும் தனது அடியார்களை வெளியேற்றுகின்றான்.

இந்தோனேஷியா அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்: லாம்போங் என்ற கிராமத்தில் நூர் சாஹிபா என்ற ஓர் அஹ்மதி பெண்மணி இருக்கின்றார். அவர் தினமும் தனது கணவருடன் ஒரு தொடக்கப் பள்ளியில் பொருட்களை விற்பனை செய்து வந்தார். அதில் அதிக லாபம் கிடைக்கவில்லை. எனினும் அது அன்றாட தேவைகளுக்கும், சந்தா கொடுப்பதற்கும் போதுமானதாக இருந்தது. அவர் ஒவ்வொரு மாதமும் மிக ஆர்வமுடன் சந்தா செலுத்துவார். கரோனா வைரஸ் காரணமாக இரண்டு மாதம் பள்ளிக்கூடம் அடைக்கப்பட்டு விட்டது. மேலும் வருமானமும் நின்று விட்டது.

சந்தா எவ்வாறு செலுத்துவது என்று அவர் மிகவும் கவலைப்பட்டார். அப்போது அவரிடமும் அவரது மகனிடமும் ஒரு பணப்பெட்டி அதாவது உண்டியல் ஒன்று இருப்பது அவருக்கு நினைவு வந்தது. அந்த உண்டியலில் அவர்கள் பைசாவை சேமித்து வந்தனர். அதில் பைசாவை சேகரித்திருந்தனர். அந்த உண்டியலை உடைத்து தஹ்ரீகே ஜதீது மற்றும் வக்ஃபே ஜதீது சந்தாவை கொடுத்து விடலாம் என்று அவர் எண்ணினார். அவர்கள் பிள்ளைகளுக்கு பொருள் தியாகத்தின் முக்கியத்துவத்தை புரிய வைத்தார்கள். மேலும் பிள்ளைகளின் அந்த தொகையை சந்தாவாக செலுத்தி விட்டார்கள். அந்தப் பெண்மணி கூறுகின்றார்கள்: வீட்டில் ஒரேயொரு குவளைதான் அரிசி எஞ்சியிருந்தது. அது இரண்டு பிள்ளைகளுக்கு கூட போதுமானதாக இருக்கவில்லை.

அவர் கூறுகின்றார்: நான் பிள்ளைகளுக்கு உணவை ஆயத்தம் செய்தேன். பிள்ளைகள் சோறு மற்றும் தண்ணீரைக் கொண்டு காலை உணவை உண்டனர். நீங்கள் ஏன் எங்களுடன் உணவு உண்பதில்லை என பிள்ளைகள் கேட்டுக் கொண்டிருந்தனர். உணவு குறைவாக இருந்தது. எனவே தாய் தந்தையர் தியாகம் செய்தனர். சிரிப்பைத் தவிர அவர்களுக்கு எங்களிடம் எந்த பதிலும் இல்லை. மதிய வேளை வந்தது. பிள்ளைகளுக்கு மீண்டும் பசி எடுத்தது. குறைவான உணவே எஞ்சியிருந்தது. ஒரு பிள்ளை மட்டுமே சாப்பிடும் அளவுக்கு உணவு இருந்தது. மற்றொரு பிள்ளைக்கும் பசி எடுத்தது. அவர் அழத் தொடங்கினார். அப்போது துஆவைத் தவிர எங்களால் எதுவும் செய்ய முடியவில்லை. தொழுதோம். மிக அதிகமாக துஆ செய்தோம். சிறிது நேரம் கழிந்த பிறகு இறைவன் புறமிருந்து உதவி வந்தது. ஒருவர் வந்தார். அவரது சோள வயலில் பணி செய்வதற்கு தொழிலாளிகளின் தேவை இருந்தது. ஆக எனது கணவருக்கு பணி கிடைத்தது. மேலும் எங்களது தேவையும் முழுமையானது.

மாலி நாட்டினுடைய முரப்பி சாஹிப் ஹாபிஸ் அதாவுல் ஹலீம் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: 70 வயதான முதிய அஹ்மதியான யாதாரா தர்கோரோ சாஹிப் ஒவ்வொரு மாதமும் தொடர்ச்சியாக சந்தா செலுத்தி வருகின்றார். அவர் வஸிய்யத் அமைப்பிலும் இணைந்துள்ளார். அவர் சந்தா கொடுப்பதற்காக 7 கிலோ மீட்டர் கரடு முரடான பாதையை பைக்கில் கடந்து வருவார். சில காலம் முன்பு அவரது நிலத்தை அருகிலுள்ள கிராமத்தின் தலைவர் அபகரித்துக் கொண்டார். அதன் காரணமாக அவர் மிகவும் கவலைக்குள்ளானார். துஆவிற்காக இங்கு எனக்கும் அவர் கடிதம் எழுதினார். மேலும் தொடர்ச்சியாக கூடுதலாக சில தொகையை சந்தாவாக கொடுக்க தொடங்கினார்.

அல்லாஹ் அருள் செய்தான். எந்த நீதிபதி அதற்கு முன்பு அவருக்கு எதிராக தீர்ப்பு வழங்கி இருந்தாரோ அவர் அஹ்மதிக்கு ஆதரவாக தீர்ப்பளித்தார். அவரது நிலம் அவருக்கு திரும்ப கிடைத்து விட்டது. அதற்கான எந்த நம்பிக்கையும் இருந்திருக்கவில்லை. ஏனெனில் கிராமத்தின் தலைவர் என்பவர் மிக உயர்ந்த மனிதர் ஆவார். மிகவும் அதிகாரம் படைத்தவராக இருந்தார். நீதிபதி தலைவருக்கு எதிராக தீர்ப்பு வழங்குவார் என்பதை எவரும் நினைத்து கூட பார்த்திருக்கவில்லை. அவர் தனது கிராமத்தில் இன்னும் சொல்லப்போனால், தனது மண்டலத்திலுள்ள பள்ளிவாசலுக்கு வந்து ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு அனைத்து மக்களுக்கு முன்பும் இறை உதவிக்கான இந்த சம்பவத்தை எடுத்துரைத்தார். அதன் காரணமாக மற்றவர்களும் தாக்கத்திற்கு ஆளாகினர். இவ்வாறு அல்லாஹ் அச்சத்தையும் அமைதியில் மாற்றி விடுகின்றான்.

பிரான்ஸ் நாட்டின் அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: ஒரு நண்பர் தனது சம்பவத்தை என்னிடம் இவ்வாறு கூறினார்: நான் இந்த ஆண்டு எனது தஹ்ரீகே ஜதீது வாக்குறுதியை கடந்த ஆண்டைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகரித்து ஓராயிரம் யூரோவாக குறிப்பிட்டுள்ளேன். ஆனால் தற்செயலாக ஊரடங்கின் காரணமாக வருமானம் மிகவும் குறைந்து விட்டது. வாக்குறுதியை முழுமை செய்வது என்பது வெளிப்படையில் சாத்தியமாக தோன்றவில்லை. நான் கொஞ்சம் கடனும் வாங்கி இருந்தேன். அதனையும் திருப்பி செலுத்த வேண்டியதிருந்தது. ஆயிரம் யூரோ என்ற எனது வாக்குறுதியை முழுமை செய்வது என்பதும் மிகக் கடினமாக இருந்தது. துஆவைத் தவிர எனக்கு வேறு எந்த வழியும் தெரியவில்லை. என்ன வருமானம் கிடைத்தாலும் நான் சாப்பிட்டாலும், சாப்பிடாவிட்டாலும் என்ன ஆனாலும் எனது வாக்குறுதியை நான் முழுமை செய்ய வேண்டும் என்ற எண்ணம்தான் எனது மனதிற்குள் இருந்தது.

அல்லாஹ்வின் அருள் மற்றும் அவனது தனிப்பட்ட கருணையின் காரணமாக எனக்கு அதே வாரத்தில் எனது முதலாளியின் சார்பாக ஊரடங்கு காலத்தில் பணி செய்ததை அடிப்படையாகக் கொண்டு எனக்கு ஓராயிரம் யூரோ கிடைத்து விட்டது. நான் எனது வாக்குறுதிக்கேற்ப எனக்கு போனஸாக கிடைத்த ஓராயிரம் யூரோ பணத்தை கொடுத்து விட்டேன். இது அல்லாஹ்வின் சார்பாக எனக்கு

## திருக்குர்ஆனிலிருந்து...

நாம் அவர்களுள் பெரும்பாலாரை (த் தங்களின்) உடன்படிக்கையில் அக்கறை உடையவர்களாக்கவில்லை. மாறாக நிச்சயமாக நாம் அவர்களுள் பெரும்பாலாரை உடன்படிக்கையினை மீறுபவர்களாகவே கண்டோம். (7:103)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

கிடைத்ததாக நான் கருதுகின்றேன் என்று அவர் கூறுகின்றார். நான் வாக்குறுதி செய்ததால் அல்லாஹ்வின் புறமிருந்து அது எனக்கு கிடைத்தது. ஏனென்றால் இந்த கடினமான நேரத்தில் எனது முதலாளி எனக்கு இவ்வளவு அதிகமான போனஸ் தொகை கொடுப்பார் என்று நான் நினைத்து கூட பார்த்திருக்கவில்லை.

லாக்டவுன் பற்றிய பேச்சு வந்ததால் நான் இதனையும் கூறி விடுகின்றேன். இன்றிலிருந்து மீண்டும் நான்கு வாரங்கள் வரை லாக்டவுன் ஆரம்பமாகி உள்ளது. எனவே பள்ளிவாசலிலும் இன்று எனக்கு முன்னால் குத்பாவில் எந்த தொழுகையாளியும் இல்லை. ஏனெனில் குத்பா நீங்கள் கொடுக்கலாம். ஆனால் பாங்கு கொடுப்பவரை தவிர வேறு எவரும் இருக்கக்கூடாது என அவர்கள் நம்மிடம் கூறியுள்ளனர்.

கனடாவைச் சார்ந்த ஒரு சிரியன் அஹ்மதி எனக்கு கடிதம் எழுதினார். மேலும் தனது அந்த கடிதத்தில் எனது சம்பவத்தை எங்காவது எடுத்துக்கூற நேரிட்டால் எனது பெயரை குறிப்பிட வேண்டாம் எனவும் அவர் எழுதியுள்ளார்.

அவர் கூறுகின்றார்: இஸ்லாமாபாதில் புதிய மர்கஸ் கட்டப்பட்ட பிறகு அதற்கு வாழ்த்துக்களை தெரிவித்தவாறு அந்த மகிழ்ச்சியின் காரணமாக தஹ்ரீகே ஜதீதில் 5000 கனடியன் டாலர் வழங்குவதாக நான் வாக்குறுதி செய்திருந்தேன். கடந்த வருடம் அவர் வாக்குறுதி செய்ததாக அவர் கூறுகின்றார். தொடர்ந்து அவர் கூறுகின்றார்: அந்நாட்களில் எனது மாத வருமானம் நான்காயிரம் டாலராக இருந்தது. நல்ல நிலைமை இருந்தது. சில மாதங்களுக்குப் பிறகு நான் புதிய வண்டி ஒன்றை வாங்கினேன். மேலும் எனது பணியையும் மாற்றிக் கொண்டேன். அதனால் எனது வருமானமும் அதிகரித்தது. நல்ல சூழல் இருந்தபோதிலும் தாராளமாக செலவு செய்யும் வகையிலும் 5 ஆயிரம் வாக்குறுதியை முழுமை செய்யும் வகையில் செழிப்பு ஏற்படவில்லை. ஏனென்றால் நான் சிரியாவிலுள்ள எனது குடும்பத்தினருக்கும் தொகையை அனுப்பி வந்தேன். 5000 டாலர் என்ற வாக்குறுதியையும் முழுமை செய்ய விரும்பினேன். மேலும் அல்லாஹ்வே! எனக்கு சந்தாவை கொடுப்பதற்கான ஏற்பாட்டைச் செய்து தருவாயாக என தினமும் துஆ செய்து வந்தேன்.

2020 ஆம் ஆண்டு ஜனவரியில் விபத்து ஒன்று ஏற்பட்டது. ஒரு மாதம் பணி செய்ய முடியவில்லை. அதனால் மாதாந்திர செலவுகளுக்கு கடன் வாங்கும் நிலையும் ஏற்பட்டது. பின்னர் கரோனா காரணமாக பொருளாதார நிலைமை மிகவும் மோசமடைந்தது. லாக்டவுன் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எந்த அளவுக்கு என்றால் பிப்ரவரி, மார்ச் மாதத்தில் கணவனும், மனைவியும் மிக மலிவான உணவையே வாங்கி உண்டு வந்தனர். அந்த அளவுக்கு நிர்பந்தத்திற்கு ஆளாகினர். ஆண்டு முடிவதற்குள் எப்படியாவது வாக்குறுதியை முழுமை செய்து விட வேண்டும் என்று மிகவும் முயற்சி செய்து வந்தனர். குறைந்தபட்சம் ஆண்டு முடிவதற்குள் இன்னும் கூறப்போனால் ரமலானிலேயே சந்தாவை முழுமை செய்து விட வேண்டும் என்று அவர் துஆவும் செய்து வந்தார். எனினும் அது எங்களுக்கு கனவாகவே இருந்தது.

தொடர்ந்து அவர் கூறுகின்றார்: பின்னர் நான் டாக்ஸி பணியை விட்டு விட்டு உணவு டெலிவரி செய்கின்ற வேலையை தொடங்கினேன். அல்லாஹ்வின் அருளால் நிலைமையும் நல்லதாக மாறியது. எனவே நாங்கள் மீண்டும் உறுதி எடுத்தோம். காலத்தின் கலீஃபாவின் துஆக்களில் பங்கு பெறுவதற்காக ரமலான் முடிவதற்கு முன்னதாகவே வாக்குறுதியை முழுமை செய்ய வேண்டும் என்று உறுதி பூண்டோம்.

அவர் கூறுகின்றார்: தனது வேலை நேரத்தை அதிகரித்து தினமும் 11 மணி நேரம் முதல் 12 மணி நேரம் வரை வேலை செய்யத் தொடங்கினேன். அதன் பிறகு எந்தெந்த இடத்திலிருந்து எங்களுக்கு வருமானம் வந்ததென்றால், நாங்கள் அதுபற்றி எண்ணிப் பார்த்திருக்கவில்லை. எனது மாத வருமானம் 9000 டாலராக ஆகியது. இவ்வாறு அல்லாஹ்வின் அருளால் நாங்கள் ரமலான் துவங்குவதற்கு 10 நாட்களுக்கு முன்பாக எமது வாக்குறுதியை முழுமை செய்து விட்டோம். எனது வாக்குறுதி இதை விட மூன்று மடங்கு அதிகமாக இருந்திருந்தால் ஆண்டு முடிவடைவதற்குள் நிச்சயம் நான் எனது வாக்குறுதியை முழுமை செய்திருப்பேன். இது எனது நம்பிக்கையாகும் என்று அவர் எழுதுகின்றார். அவர் சிரியாவிலுள்ள தனது ஏழை உறவினர்களுக்கும் உதவியும் செய்கின்றார்.

சிராலியோன் அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: அங்கு உஸ்மான் சாஹிப் இருக்கின்றார். ஃபிரீ டவுண் என்ற இடத்தின் ஒரு ஜமாஅத்தின் இமாம் ஆவார். அவர் கூறுகின்றார்: நாங்கள் ஒவ்வொரு ஆண்டும் தஹ்ரீகே ஜதீது சந்தா கொடுக்கின்றோம். ஆனால் இந்த ஆண்டு எனக்கு இவ்வாறு எண்ணம் வந்தது. நான் கொடுக்கின்ற தொகை மிக சாதாரண தொகை ஆகும். எனக்கு எந்த வேலையும் இல்லை. ஒரு சிறிய கடை மட்டுமே உள்ளது. அதனை நானும் எனது மனைவியும் நடத்தி வருகின்றோம். அதிலிருந்து சொல்லும்படியாக எந்த வருமானமும் இல்லை. அந்த வருமானத்தைக் கொண்டு மிகக் கஷ்டமாகவே குடும்பம் கழிந்து வந்தது. மீண்டும் மீண்டும் தஹ்ரீகே ஜதீது சந்தா செலுத்துவது பற்றிய அறிவிப்பை நாங்கள் கேட்டு வந்தோம். எனவே ஒரு பணப் பெட்டியை நாம் உருவாக்குவோம். அதில் தினமும் கொஞ்சம் தொகையை போட்டு வருவோம் என எனது மனைவி என்னிடம் கூறினார். மேலும் அக்டோபர் மாதத்தின் கடைசியில் அதை ஒன்றுகூட்டி அந்த தொகையை தஹ்ரீகே ஜதீது சந்தாவாக செலுத்தி விடுவோம் என்று கூறினார். கடந்த ஆண்டுகளில் நாங்கள் ஒருபோதும் 20000 லியோனை விட அதிகமாக சந்தா கொடுத்ததில்லை.

அவர் கூறுகின்றார்: ஆனால் இந்த வருடம் அல்லாஹ்வின் அருளால் இந்த வழிமுறையின் மூலமாக நாங்கள் இரண்டு லட்சம் லியானை விட அதிகமாக சந்தா கொடுத்திருக்கின்றோம். எனது மற்ற இரண்டு சகோதரர்களும் இதே வழிமுறையை பின்பற்றினார்கள். அவர்களும் ஒரு லட்சத்தி முப்பதாயிரம் லியோனை கொடுத்துள்ளார்கள்.

அவர் கூறுகின்றார்: எனது மனைவி குறிப்பாக இவ்வாறு செய்ததன் காரணமாக மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றார். ஏனெனில் இந்த வருடம் அல்லாஹ் எங்களுக்கு நல்ல பொருள் தியாகத்தை செய்வதற்குரிய பாக்கியத்தை வழங்கி விட்டான். இவ்வாறு செய்ததன் காரணமாக எங்களின் பொருள் தியாகத்தின் தரமும் உயர்ந்து விட்டது. அல்லாஹ்வின் அருளால் வருமானமும் அதிகரித்து விட்டது. இனி அல்லாஹ் எங்களுக்கு கற்றுத் தந்த வழிமுறையை தொடர்ந்து செயல்படுத்தி வருவோம்.

மார்ஷல் ஐலேண்ட்ஸ் என்ற இந்த இடம் அமெரிக்காவிலிருநதும் தொலைவில் உள்ள ஒரு பகுதியாகும். அங்குள்ள முபல்லிக் சாஜித் இக்பால் சாஹிப் எழுதுகின்றார்: மார்ஷல் ஐலேண்டில் வைவில் உள்ள கியோஷி ராகின் என்ற நாஸிர் ஒருவர் இருக்கின்றார். நடப்பு ஆண்டில் ஜமாஅத் சகோதரர்களிடமிருந்து தஹ்ரீகே ஜதீதிற்கான அப்போது வாக்குறுதி பெறப்பட்டது. கோஷி சாஹிப் கூறினார்: எனக்கு எந்த வேலையும் இல்லை. தங்குவதற்கும் இடமில்லை. உணவும் கூட

## திருக்குர்ஆனிலிருந்து...

எங்கள் இறைவனின் அடையாளங்கள் எங்களிடம் வந்தபோது, நாங்கள் அவற்றில் நம்பிக்கை கொண்டுள்ளோம். எதற்காக எங்களைப் பழிவாங்குகிறாய். எங்கள் இறைவா! எங்களுக்குப் பொறுமையினை இறக்குவாயாக. மேலும் (உனக்கே) கட்டுப்பட்டவர்களாக நாங்கள் இருக்கின்ற நிலையிலே எங்களுக்கு நீ மரணத்தைத் தந்தருள்வாயாக (என்று நாங்கள் இறைவனை வேண்டுகின்றோம்.) 7:127

Mohaideen Ali & M.Sabahul Islam (Melapalayam)

ஜமாஅத்தின் விருந்தினர் இல்லத்தையே சார்ந்ததாக உள்ளது. எனவே சிறிது காலம் வரை பள்ளிவாசலில் தங்குவதற்கு அவரை நாங்கள் அனுமதித்தோம். மேலும் அத்துடன் கூறினோம்: மிக சாதாரண தொகையாக இருந்தாலும் பரவாயில்லை. நீங்கள் ஏதாவது ஒரு தொகையை வாக்குறுதியாக எழுதுங்கள். மேலும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்வான் என்றும் கூறப்பட்டது. அப்போது அவர் இரண்டு அமெரிக்கன் டாலர்களை தனது வாக்குறுதியாக எழுதினார்.

சில மாதங்களுக்குப் பிறகு பள்ளிவாசலுக்கு வந்தார். ஐம்பது டாலர்களை தஹ்ரீகே ஜதீது சந்தாவாக கொடுத்து விட்டார். அவர் கூறினார்: அல்லாஹ் எனது துஆக்களை ஒப்புக் கொண்டு விட்டான். எனக்கு வேலையும் கிடைத்து விட்டது. வசிப்பதற்கு அடுக்குமாடி வீடும் கிடைத்து விட்டது. தற்போது அவர் தனது உணவிற்கான ஏற்பாட்டையும் சுயமே செய்து கொள்வதற்கு தகுதி படைத்தவராக ஆகிவிட்டார். ஈமானிய வலிமையை பாருங்கள். அல்லாஹ் எவ்வாறான வழிமுறைகளில் உதவி செய்கின்றான் என்றால் நமது முபல்லிக்மார்களும் சில முறை ஆச்சரியத்திற்கு உள்ளாகி விடுகின்றார்கள்.

கேம்பியா அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்: பஸே என்ற ஊரில் தஹ்ரீகே ஜதீது சந்தா தொடர்பாக நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டது. வாக்குறுதிகளை செலுத்துவது தொடர்பாக கவனமூட்டப்பட்டது. அந்த நிகழ்ச்சியில் மூஸா சாஹிப் அவர்களும் கலந்து கொண்டிருந்தார்கள். அவர்களிடத்தில் சந்தா கொடுப்பதற்கு எதுவும் இல்லாமல் இருந்தது. மிகவும் கவலையடைந்தார். தஹஜ்ஜுத் தொழுகையில் எழுந்து துஆ செய்தார். அல்லாஹ்வின் வழியில் செலவிடுபவர்களை சார்ந்தவர்களாக ஆகிவிடும் தகுதியை பெறுவதற்கு அல்லாஹ்வின் அருளை வேண்டியவாறு அவர் அல்லாஹ்வின் முன் குனிந்தார்.

எனவே அல்லாஹ்வும் அவரது உள்ளத்தின் ஆசையை ஒப்புக் கொண்டான். சில நாட்களே கழிந்தன. அவர் எந்த கம்பெனியில் ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணி செய்து வந்தாரோ அந்த கம்பெனி அவரிடம், நாங்கள் பஸே ஊரில் இரண்டு நாட்கள் நிகழ்ச்சி ஒன்றை நடத்துகின்றோம். அதில் நீங்கள் கலந்து கொண்டால் அதற்கு ஊதியமாக 4000 டலாஸி உங்களுக்கு தரப்படும் என்று கூறியது. அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். இரண்டு நாட்கள் நிகழ்ச்சியில் பங்கு பெற்ற பிறகு தனது வாக்குறுதியை இரண்டாயிரம் டலாஸியாக அதிகரித்து விட்டார். சந்தா கொடுத்ததன் விளைவாக அல்லாஹ் அவரது வருமானத்தின் வழிமுறைகளை மேலும் அதிகரித்து விட்டான். அவர் மற்ற அஹ்மதி சகோதரர்களக்கும் தஹ்ரீகே ஜதீது சந்தாவின் முக்கியத்துவம் மற்றும் பொருள் தியாகம் தொடர்பாக கவனமூட்டி வருகின்றார்.

பிலிப்பைன்ஸ் நாட்டைச் சார்ந்த தல்ஹா அலி சாஹிப் சதர் ஜமாஅத்தாகவும் இருக்கின்றார். முரப்பியும் ஆவார். அவர் கூறுகின்றார்: பிலிப்பைன்ஸ் நாட்டின் பழைய ஜமாஅத்துகளில் ஸீமாநோல் என்ற ஒரு ஜமாஅத்தும் உள்ளது. அங்கு பெரும்பாலோர் கல்வித்துறையில் தொடர்புடையவர்களாக இருக்கின்றனர். அந்த ஜமாஅத்தின் சதர் சாஹிப் தனது இலக்கை விட அதிகமாக சந்தா வசூல் செய்த பிறகு எனக்கு இவ்வாறு மெஸேஜ் அனுப்பினார். நீங்கள் மூன்று ஆசிரியர்களை குறிப்பாக துஆவில் நினைவில் வையுங்கள். ஏனெனில் அவர்களுக்கு மார்ச் மாதத்திலிருந்து சம்பளம் கிடைக்கவில்லை. ஆயினும் அவர்கள் தஹ்ரீகே ஜதீதில் அதிகமாக பங்கு பெற்றுள்ளனர். அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக தியாகம் செய்கின்ற அவர்களின் இந்த உணர்வை பாருங்கள். தொலைதூர பகுதியில் அமர்ந்து கொண்டு இந்த மக்கள் எவ்வாறு தியாகம் செய்கின்றனர் என்பதையும் பாருங்கள்.

கபாபீரிலிருந்து முபல்லிக் ஷம்சுத்தீன் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: பாலஸ்தீனத்தில் அல் கலீல் புதிய ஜமாஅத் ஆகும். பெரும்பாலான ஜமாஅத் உறுப்பினர்களின் பொருளாதார நிலை மிகவும் பலவீனமாக உள்ளது. ஆனால் அல்லாஹ்வின் அருளால் அனைவரும் தஹ்ரீகே ஜதீதில் பங்கு பெற்றார்கள். இப்ராஹீம் சாஹிப் என்பவர் அல் கலீல் ஜமாஅத்தின் ஒரு புதிய அஹ்மதி ஆவார். அன்னார் பைஅத் செய்த உடன் பொருள் தியாகத்தில் அதிகமாக பங்கு பெற்று வந்தார். இந்த முறை அவர் ஒரு பெரும் தொகையை தஹ்ரீகே ஜதீது சந்தாவாக கொடுத்திருக்கின்றார்.

அந்த நண்பர் கூறுகின்றார்: எனது ஒரு நண்பர் எனக்கு கடன் தர வேண்டியதிருந்தது. அதனை அவர் ஏதோவொரு நிர்பந்தத்தின் காரணமாக திருப்பித்தர முடியாமல் இருந்து வந்தார். நான் வெகு காலம் காத்திருந்தேன். எனக்கு தஹ்ரீகே ஜதீது சந்தா கொடுக்க வேண்டியதிருந்தது. வேறு சில பொருளாதார கஷ்டங்களும் இருந்தன. ஆயினும் அந்த கடன் தொகை எனக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லை. எவ்வாறிருப்பினும் நான் அமீர் சாஹிபை சந்தித்து சில ஏற்பாடுகள் செய்து தஹ்ரீகே ஜதீது சந்தாவையும் கொடுத்து விட்டேன்.

எனது நிலையை புரிந்து கொண்ட பிறகு அமீர் சாஹிப் அவர்கள் கூறினார்கள்: இப்போது நீங்கள் அல்லாஹ்வின் வழியில் தஹ்ரீகே ஜதீது சந்தாவை செலுத்தி விட்டீர்கள். எனவே நிச்சயமாக அல்லாஹ்வும் பரக்கத் செய்வான். ஆக அமீர் சாஹிப் சென்ற சில மணி நேரத்திற்கு பிறகு எனக்கு கடன் தர வேண்டியவர் எனது கடனை திருப்பிக் கொடுத்து விட்டார். எனது அனைத்து கஷ்டங்களும் நீங்கி விட்டன.

ஜெர்மனி வேஸ்பாதன் என்ற ஊரிலிருந்து ஒரு நண்பர் எழுதுகின்றார்: ஒருவர் தஹ்ரீகே ஜதீது அலுவலகத்திற்கு வருகை தந்தார். மேலும் எனது குடியுரிமை வழக்கு ஒரு நீதிபதியிடம் உள்ளது அவர் பெரும்பாலும் ஒப்புதல் வழங்குவதில்லை என்று அவர் கூறினார். தஹ்ரீகே ஜதீது தொடர்பான நிகழ்ச்சியில் ஈமானை வலுவூட்டக்கூடிய சம்பவங்களை அவர் கேட்டார். அதன் பிறகு அவர், நான் ஓராயிரம் யூரோவை தஹ்ரீகே ஜதீது சந்தாவாக கொடுப்பேன் என எண்ணம் கொண்டார். அதன் பிறகு நடந்தது என்னவென்றால், எனது அந்த வழக்கு வேறொரு நீதிபதியிடம் சென்று விட்டது. அல்லாஹ்வின் அருளால் எனது வழக்கும் வெற்றி பெற்று விட்டது. இப்போது நான் அல்லாஹ்விடத்தில் செய்த வாக்குறுதியை முழுமை செய்ய வந்துள்ளதாக அவர் கூறினார். மேலும் அவர் எவ்வளவு தொகையை வாக்குறுதியாக கொடுத்திருந்தாரோ அதை செலுத்தி விட்டார்.

யூ.கே நாட்டின் தஹ்ரீகே ஜதீது செயலர் கூறுகின்றார்: பிரிட்டன் நாட்டின் ஓர் அஹ்மதி நண்பருக்கு வேலை எதுவும் இல்லாமல் இருந்தது. தஹ்ரீகே ஜதீது சந்தா கொடுத்த மறு நாளே அவருக்குரிய வேலை கிடைத்து விட்டது.

மேலும் பிரிட்டன் நாட்டின் மற்றொரு அஹ்மதி நண்பருக்கு பொருளாதார கஷ்டம் இருந்து வந்தது. இருந்தபோதிலும் அவர் சந்தா செலுத்தி விட்டார். அதன் பிறகு சில காலம் கழித்து HMRC வரி செலுத்தும் துறையிலிருந்து அவருக்கு கடிதம் ஒன்று வந்தது. அதில் கடந்த ஆண்டுகளில் நீங்கள் அதிகமான தொகை செலுத்தியிருந்தீர்கள். அது தற்போது திருப்பி தரப்படுகின்றது என்று கூறப்பட்டிருந்தது. இந்த தொகை அவர் சந்தாவாக கொடுத்த தொகையை விட அதிகமாக இருந்தது.

மற்றொரு நபருக்கு தனது வேலையில் சிக்கல் இருந்தது. ஒருவர் அவரைப் பற்றி வீண் புகார் ஒன்றை செய்திருந்தார். அந்த அஹ்மதி நண்பர் தஹ்ரீகே ஜதீது சந்தாவை கொடுத்தார். அதன் பிறகு எந்த நபர் அவரைப் பற்றி புகார் செய்திருந்தாரோ அவர் பணி நீக்கம் செய்யப்பட்டு விட்டார். ஒரு நண்பரின் கார் பள்ளத்தில் விழுந்து விட்டது. கார் பள்ளத்திலிருந்து பாதுகாப்பாக வெளியேறி விட்டால், நான் தஹ்ரீகே ஜதீதில் அதிகமாக சந்தா கொடுப்பேன் என அவர் நிய்யத் வைத்தார். அதன்படி எந்த பாதிப்புமின்றி கார் பள்ளத்திலிருந்து வெளியே வந்து விட்டது. எனவே அவர் ஒரு வார வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு தஹ்ரீகே ஜதீது சந்தா கொடுத்து விட்டார்.

ஒரு சிறுவன் தனது ஆறு மாத கைச்செலவு பணத்தை தஹ்ரீகே ஜதீது சந்தாவாக கொடுத்து விட்டார். பிள்ளைகளும் பொருள் தியாகத்தில் முன்னேறுவதற்கு முயற்சி செய்கின்றனர்.

ஒரு இளைஞர் விடுமுறையில் வெளியூர் செல்வதற்கு பணத்தை சேமித்து வைத்திருந்தார். அந்த அனைத்து தொகையையும் தஹ்ரீகே ஜதீது சந்தாவாக கொடுத்து விட்டார்.

பார்க்கிங் மற்றும் டிகங்ஹம் ஜமாஅத்தின் சதர் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்: இந்த முறை நிச்சயம் தஹ்ரீகே ஜதீது இலக்கை முழுமை செய்ய வேண்டும் என நாங்கள் உறுதி பூண்டோம். தனது கையிலிருந்து கூடுதலாக கொடுக்க நேரிட்டாலும் சரியே என்று எண்ணினார். எனவே டார்கெட்டிலிருந்து எஞ்சிய தொகையை அவர் தன் சார்பாக செலுத்தி விட்டார். அதன் பிறகு அவருக்கு அவரது அலுவலகத்திலிருந்து கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு 70 சதவிகிதம் கூடுதலாக உங்களுக்கு போனஸ் கிடைக்கும் என்று தகவல் வந்தது. அவர் கூடுதலாக சந்தாவாக எவ்வளவு தொகையை கொடுத்தாரோ அதை விட கூடுதலாக போனஸ் தொகை அவருக்கு கிடைத்து விட்டது.

கஜகிஸ்தானைச் சார்ந்த அப்துர் ரஹ்மாஃப்வ் சாஹிப் எழுதுகின்றார்: நான் தொடர்ச்சியாக சந்தா ஆம், ஜல்ஸா ஸாலானா, தஹ்ரீகே ஜதீது, வக்ஃபே ஜதீது ஆகிய சந்தாக்களை செலுத்தி வருகின்றேன். அந்த சந்தாக்களின் பரக்கத்துகளின் விளைவாக எனது மனைவி மருத்துவ படிப்பை முழுமை செய்து அரசாங்க நிகழ்ச்சியில் வேலை வாய்ப்பை பெற்றார். அரசாங்கம் பிள்ளைகளின் தங்குமிடத்திற்காக கடனும் வழங்கியது. பிள்ளைகள் நர்ஸரி வகுப்பில் படித்து வருகின்றன. இப்போது பொருளாதார நிலைமைகள் முன்பை விட மிக சிறந்ததாக ஆகிவிட்டன. என்னிடத்தில் தற்போது இரண்டு வண்டிகள் உள்ளன. நான் தற்போது சொந்த வீடு கட்டுவதற்கு எண்ணம் கொண்டுள்ளேன். இவை அனைத்தும் அல்லாஹ்வின் அருள் மற்றும் சந்தா கொடுத்ததன் விளைவாகும். நாங்கள் இதற்கு முன்பு வாடகை வீட்டிலேயே வசித்து வந்தோம். பொருளாதார கஷ்டம் இருந்து வந்தது. ஆயினும் நாங்கள் சந்தா கொடுத்து வந்தோம். அதன் விளைவாக அல்லாஹ் எங்கள் மீது அளவற்ற அருள் செய்து விட்டான் என்று அவர் கூறுகின்றார்.

இவ்வாறு பல்வேறு சமுதாயத்தைச் சார்ந்த பலதரப்பட்ட மக்கள் சந்தா கொடுப்பதில் மகிழ்ச்சி அடைந்தவர்களாக இருக்கின்றார்கள்.

கினிபஸாவைச் சார்ந்த முரப்பி முஹம்மது ஹஸன் சாஹிப் எழுதுகின்றார்: முஹம்மது இப்ராஹீம் என்ற ஓர் அஹ்மதி நண்பர் உள்ளார். கடந்த வருடம் தஹ்ரீகே ஜதீது சந்தா தொடர்பாக நான் அறிவிப்பு செய்தபோது அந்த அறிவிப்பைக் கேட்டு அவர் தனது வாக்குறுதியை கொடுத்தார். மேலும் குத்பாவைக் கேட்ட பிறகு ஒவ்வொரு மாதமும் நான் சந்தா கொடுத்து விடுவேன் என்று அவர் எண்ணம் கொண்டார். ஆக அவ்வாறே செய்தும் வந்தார். ஆனால் கரோனா தொற்றின் காரணமாக அவரது வருமானம் தடைபட்டது.

அவர் கூறுகின்றார்: எனக்கு அப்போது கவலை ஏற்பட்டது. தஹ்ரீகே ஜதீது நிதியாண்டு முடிவடைகின்ற தருணத்தை எட்டியது. அப்போது எனது கவலை இன்னும் அதிகரித்தது. நான் அதிகமாக துஆ செய்து வந்தேன். ஒரு நாள் காலையில் நண்பர் ஒருவரிடமிருந்து ஃபோன் வந்தது. அவர் என்னிடம் உங்களால் கட்டுமான செங்கல்களை தயார் செய்ய முடியுமா என்று கேட்டார். நானும் உடனே ஆம் என்று கூறினேன். இவ்வாறு வீட்டில் அமர்ந்தபடியே எனக்கு பணியும் கிடைத்து விட்டது. அதன் காரணமாக அல்லாஹ் எனது வாக்குறுதியை முழுமை செய்யக்கூடிய வழிமுறையையும் ஏற்படுத்தி தந்து விட்டான். ஊரடங்கின் காரணமாக எனக்கு இருந்த பொருளாதார கஷ்டத்தையும் அவன் நீக்கி விட்டான். இந்த அனைத்து பரக்கத்துகளும் காலத்தின் கலீஃபாவின் குரலுக்கு செவிமடுத்ததன் காரணமாகவே ஆகும் என இப்ராஹீம் சாஹிப் கூறுகின்றார்.

தன்ஸானிய்யா அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்: ரன்ஜிபார் என்ற இடத்திலிருந்து முபல்லிக் சாஹிப் கூறுகின்றார்: ஓர் அஹ்மதி மூதாட்டி ஹம்னா பீபீ சாஹிபா என்பவர் ஒவ்வொரு ஆண்டும் தனது குறைந்த வருமானத்திலிருந்து சந்தா கொடுப்பதில் முதலிடம் வகித்து வந்தார். இந்த வருடமும் ரமலான் மாதத்தில் பொருள் தியாகம் செய்வதற்கு கூறப்பட்டது. ரமலான் மாதத்திலேயே தனது வாக்குறுதியை முழுமையாக செலுத்தி விட வேண்டும் என அவர் முழுமையாக முயற்சி செய்தார். ஆனால் பொருளாதார கஷ்டத்தின் காரணமாக அவருக்கு எந்த தொகையும் கிடைக்கவில்லை.

அவர் என்னிடம் கூறினார்: ஒரு நாள் இதனால் எந்த அளவுக்கு எனக்கு துன்பம் ஏற்பட்டதென்றால், நான் இரவில் எழுந்து விட்டேன். இறைவனிடத்தில் மன்றாடி துஆ செய்தேன். காலத்தின் கலீஃபாவின் குரலுக்கு செவி மடுக்கின்ற நேரமாகும். ஆனால் நான் அதிலிருந்து இழப்பிற்குரியவனாக இருக்கின்றேன் என்று அழுது துஆ செய்தேன். எனவே அதே நாள் காலையில் அவருடைய ஒரு உறவினரிடமிருந்து அவருக்கு ஃபோன் வந்தது. நீண்ட காலமாகவே அவரிடம் தொடர்பு கொள்ள முடியாமல் இருந்தது. எவ்வாறிருப்பினும் அந்த உறவினர் அந்த பெண்மணிக்கு தன் சார்பாக தொகை ஒன்றை அன்பளிப்பாக அனுப்பி வைத்தார். அதன் மூலம் அந்த மூதாட்டி தனது சந்தாவை செலுத்தி விட்டார்.

அந்தப் பெண்மணி கூறுகின்றார்: சந்தா கொடுப்பதன் காரணமாக எனது இறைவன் என்னுடன் எப்பொழுதும் அன்புடன் நடந்து வருகின்றான். என்னை ஒருபோதும் அவன் தனியாக விட்டுவிடவில்லை.

காதியானிலிருந்து வகீலுல் மால் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: கேரளாவிலுள்ள கருளாயி ஜமாஅத்தைச் சார்ந்த நண்பர் ஒருவர் ஐந்து லட்சம் ரூபாய் தஹ்ரீகே ஜதீது சந்தா கொடுக்க வேண்டியதிருந்தது. அவர் தனது தொழிலுக்காக பர்னிச்சர் வாங்குவதற்காக கொஞ்சம் தொகையை வைத்திருந்தார். குறித்த நேரத்தில் தொகையை செலுத்தாத நிலையில் அந்த தொழில் முடங்கிப் போவதற்கும் வாய்ப்பு இருந்தது. ஆனால் அதே நேரத்தில் தஹ்ரீகே ஜதீது சந்தா செலுத்தும்படியும் கூறப்பட்டிருந்தது. எனவே சந்தாவின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு அந்த தொகையை சந்தாவாக செலுத்தி விட்டார்.

இந்த கலப்பற்ற நிய்யத்தின் விளைவாக அல்லாஹ் எவ்வாறு அருள் செய்தான் என்றால் சிறிது நேரத்திலேயே சந்தாவாக கொடுக்கப்பட்ட தொகையை விட பல மடங்கு அதிகமான தொகை அவரது வங்கிக் கணக்கில் ஒருவர் சார்பாக அனுப்பப்பட்டது. தனது தொழிலுக்கு வாங்க வேண்டிய பொருட்களை அதன் மூலம் அவர் வாங்கிக் கொண்டார். அதன் பிறகு அன்னாருக்கு பல மில்லியன் ரூபாய் பிராஜக்ட் ஒன்று அவருக்கு கிடைத்தது. எனவே தனது வாக்குறுதியை மட்டுமல்லாமல் ஒரு பெரும் தொகையை அதாவது சுமார் 12 லட்சம் ரூபாயை தஹ்ரீகே ஜதீது சந்தாவாக கொடுத்து விட்டார்.

இந்தியாவிலிருந்து அப்துல் வாஹிது சாஹிப் தஹ்ரீகே ஜதீது இன்ஸ்பெக்டர் எழுதுகின்றார்: கேரளாவின் ஒரு ஜமாஅத்தான கொச்சின் ஜமாஅத்தில் தஹ்ரீகே ஜதீது தொடர்பாக ஜல்ஸா ஒன்று நடத்தப்பட்டது. அதில் தஹ்ரீகே ஜதீது சந்தாவின் நோக்கம் தொடர்பாக எடுத்துரைக்கப்பட்டது. ஜமாஅத் சகோதரர்கள் தஹ்ரீகே ஜதீது பொருள்

## திருக்குர்ஆனிலிருந்து...

எம்முடைய வசனங்களையும், மரணத்திற்குப்பின் உள்ள சந்திப்பினையும் பொய்ப்படுத்தியவர்களின் எல்லாச் செயல்களும் வீணாகி விட்டன. அவர்கள் தம்முடைய செயல்களுக்குரிய கூலியை மட்டுமே பெறுவார்கள். (7:148)

A.Basheer Ahmad, Sec.Waqf-e-jadid & Naib Sec.Maal Melapalayam

தியாகத்தில் போட்டி போட்டுக் கொண்டு பங்கு பெறுவதற்கு அறிவுறுத்தப்பட்டது. ஜல்ஸா முடிந்த பிறகு நாங்கள் சதர் சாஹிப் அவர்களின் வீட்டிற்கு சென்றோம். 8 வயது சிறுமியான சதர் சாஹிபின் மகள் தனது பணப் பெட்டியை எடுத்துக் கொண்டு வந்தாள். மேலும் மவ்லவி சாஹிப், இதிலுள்ள தொகையை தஹ்ரீகே ஜதீது சந்தாவில் செலுத்தி விடுங்கள் என்று கூறினார். அப்போது அந்த டப்பாவில் சுமார் 864 ரூபாய் இருந்தது. அதனை அந்த சிறுமி தஹ்ரீகே ஜதீது சந்தாவிற்காக கொடுத்தார்.

அவரது தந்தை கூறினார்: எனது மகள் ஒரு நீண்ட காலமாக தஹ்ரீகே ஜதீது சந்தா கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இதனை சேமித்து வந்தாள். நான் எனது கடையிலிருந்து திரும்பி வரும்போது எனது பாக்கெட்டில் உள்ள சில்லரைகளை வாங்கி சேமித்து வந்தார். அந்த சில்லரைகளை தனக்கு தரும்படி கேட்பார். பிறகு அதனை அவர் தனது பணப்பெட்டியில் போட்டுக் கொள்வார். இவ்வாறு அக்குழந்தை பல மாதங்களாக சேமித்து வந்த தொகையை சந்தாவாக கொடுத்து விட்டார். பொருள் தியாகத்தில் பங்கு பெறக்கூடிய புரிதலை அல்லாஹ் அஹ்மதி பிள்ளைகளுக்கும் இவ்வாறு ஏற்படுத்தியுள்ளான்.

பைஅத் செய்த பிறகு தியாகம் செய்வதற்கு எவ்வாறு கவலை ஏற்படுகிறது என்பது தொடர்பாக அல்பானியாவிலிருந்து அப்துஸ் சமது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: அல்பானியாவின் ஒரு கிராமத்தில் வசித்து வருபவர் தாலிப் ஜர்ஜி சாஹிப் ஆவார். அவர் உள்ளூர்வாசி ஆவார். ஒரு நாள் ஜுமுஆவிற்குப் பிறகு சந்தித்தார். அவர் ஓய்வூதியம் பெறுபவர் ஆவார். சாதாரண வருமானத்திற்கு மத்தியிலும் ஒவ்வொரு மாதமும் தவறாமல் சந்தா கொடுத்து வருவார். அவரிடத்தில் சொந்தமாக வண்டி கூட கிடையாது. பொதுப் போக்குவரத்தையே பயன்படுத்தி ஜுமுஆவிற்கு வருகை தருவார். தற்போதைய தொற்றின் காரணமாக நீண்ட காலத்திற்கு பிறகு ஜுமுஆவிற்கு வந்திருந்தார். நீண்ட மாதங்களாக சந்தா கொடுக்கவில்லையே என்று மனதிற்கு கஷ்டமாக இருந்து வந்தது என்று ஜுமுஆவிற்குப் பிறகு கூறினார். மேலும் அத்துடன் எட்டு மாத சந்தாவையும் கொண்டு வந்தார். சந்தா ஆம் மட்டுமின்றி தஹ்ரீகே ஜதீது, வக்ஃபே ஜதீது சந்தாவையும் செலுத்தி விட்டார். இதுபோன்று ஏராளமான சம்பவங்கள் உள்ளன.

தன்ஸானியாவிலிருந்து முஅல்லிம் ஹுஸைன் சாஹிப் எழுதுகின்றார்: ஸாலிஹ் மடுங்கோ என்ற கலப்பற்ற ஓர் அஹ்மதி இருக்கின்றார். அவர் போட்டி போட்டுக் கொண்டு மிக அதிகமாக சந்தாவில் பங்கு பெறக்கூடியவர் ஆவார். சிறிது காலம் நோயுற்றிருந்தார். சிகிச்சைக்காக அவரிடம் பணம் இல்லாமல் இருந்தது. மாதத்தின் கடைசியில் அவருக்கு ஓய்வூதியத்தின் பணம் கிடைத்தது. அப்போது அவர் முதன் முதலில் தனது தஹ்ரீகே ஜதீது சந்தாவின் வாக்குறுதியை முழுமை செய்தார். நான் அவருக்கு புரிய வைக்க முயற்சி செய்தேன். நீங்கள் இந்த தொகையைக் கொண்டு உங்களுக்கு சிகிச்சை செய்து கொள்ளுங்கள். பிறகு நீங்கள் உங்களது வாக்குறுதியை முழுமை செய்து கொள்ளலாம் என்று கூறினேன். அதற்கு அல்லாஹ்தான் குணமளிப்பவன் ஆவான். எனவே முதலில் நான் எனது இறைவனிடம் செய்து கொண்ட வாக்குறுதியை முழுமை செய்வேன். அதன் பிறகு நான் எனக்கு சிகிச்சை செய்து கொள்வேன் என்று கூறிவிட்டார்.

இது தியாகத்தின் விநோதமான தரங்களாகும். இதைப் பார்த்து ஆச்சரியம் ஏற்படுகின்றது. தொலை தூரத்தில் அமர்ந்திருக்கின்ற இந்த புதிதாக இணைந்தவர்களுக்கும் கூட சந்தாவின் முக்கியத்துவத்தை அல்லாஹ் தெளிவுபடுத்தி விட்டான். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்த பிறகு அல்லாஹ் அந்த மக்களிடம் ஒரு புரட்சியை ஏற்படுத்தி விட்டான்.

கேம்பியா நாட்டின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்: ஒரு பகுதியில் தஹ்ரீகே ஜதீது திட்டத்தின் தேட்டங்கள் தொடர்பான நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டது. இஸ்லாத்திற்காக வாழ்க்கையை அர்ப்பணிப்பது, எளிய வாழ்க்கையை மேற்கொள்வது, சிறிய சிறிய பணிகளை கூட இழிவாக கருதாமல் இருப்பது ஆகியவற்றின் பக்கம் கவனமூட்டப்பட்டது. ஆக அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு இப்ராஹீம் சாஹிப் என்ற நண்பர் கூறினார்: நான் ஓராயிரம் டலாஸியை தஹ்ரீகே ஜதீது சந்தாவாக தர விரும்புகின்றேன் என்று கூறினார். மேலும் தனக்கு ஒரே ஒரு மகன் இருக்கின்றார். அவரது வாழ்க்கையை அர்ப்பணித்து அவரை முரப்பியாக ஆக்குவதற்கு அனுப்பி வைப்பேன் என்றும் கூறினார். தற்போது அவரின் மகன் நடுநிலைப் பள்ளியில் பயின்று வருகின்றார். தனது மகன் இன்ஷா அல்லாஹ் முரப்பி ஆக வேண்டும் என்பது அவரது எண்ணமாக உள்ளது.

இதேபோன்று கானாவிலிருந்து ஜெனரல் செகரட்டரி அகீரா ஸோன் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: மண்டல சதர் சாஹிப் அவர்கள் ஐம்பது கானா ஸேட்டி தொகையை வாடகைப் பணமாக தந்தார்கள். நான் அதனை தஹ்ரீகே ஜதீது சந்தாவில் கொடுத்து விட்டேன். மறுநாள் காலை நான் எனது அதிகாரிகளுடன் ஒரு வேலை நிமித்தமாக சென்றிருந்தேன். திரும்பி வந்தவுடன் நீங்கள் எவ்வாறு வீட்டிற்கு செல்வீர்கள் என்று அதிகாரி கேட்டார். அதற்கு நான் டாக்ஸியில் செல்வேன் என்று கூறினேன். அப்போது அந்த அதிகாரி என்னிடம் எனது ஃபோனை கேட்டார். பின்னர் உங்களது ஃபோனை பரிசோதிக்கவும் என்று கூறினார். நான் பரிசோதித்து பார்த்தபோது ஓராயிரம் ஸட்டி தொகையை ஃபோன் மூலமாக எனக்கு அவர் அனுப்பி வைத்திருந்தார். நான் ஐம்பது ஸேட்டி தொகையை சந்தாவாக கொடுத்தேன். எனக்கு ஆயிரம் ஸேட்டி தொகை கிடைத்து விட்டது.

ஆக நான் எடுத்துரைத்த சில சம்பவங்கள் இவையாகும். என்னிடம் இதுபோன்ற எண்ணற்ற சம்பவங்கள் உள்ளன. அல்லாஹ் இந்த தியாகம் செய்யக்கூடியவர்களின் செல்வத்திலும், வாழ்நாளிலும் எல்லையற்ற பரக்கத்துகளை செய்வானாக. இவ்வாறு செய்யப்பட்ட தியாகங்களில் எவ்வளவு தியாகம் செய்யப்பட்டது என்பது தொடர்பான விளக்கங்களில் சிலவற்றை குறிப்பிட்டு விடுகிறேன். பொதுவாக தஹ்ரீகே ஜதீது அறிவிப்புடன் இதுவும் குறிப்பிடப்படுவதுண்டு. அல்லாஹ்வின் அருளால் தஹ்ரீகே ஜதீதின் 86 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் தேதியுடன் நிறைவடைந்தது. மேலும் 87–ஆம் ஆண்டு தொடங்கி விட்டது. அல்லாஹ்வின் அருளால் இந்த வருடம் உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு தஹ்ரீகே ஜதீது நிதி அமைப்பின்கீழ் 14.5 மில்லியன் அதாவது "ஒரு கோடியே நாற்பத்தைந்து லட்சம்" பவுண்ட் பொருள் தியாகம் செய்வதற்கு நற்பாக்கியம் கிடைத்துள்ளது. கடந்த ஆண்டு வசூலான தொகையை விட எட்டு லட்சத்து எம்பத்து இரண்டாயிரம் பவுண்ட் கூடுதலாக இந்த ஆண்டு வசூலாகி உள்ளது.

இந்த வருடம் முழு உலக ஜமாஅத்துகளில் ஜெர்மனி முதலிடத்தை பிடித்துள்ளது. பாகிஸ்தானின் பொருளாதார நிலைமைகள் மற்றும் சமூகம், அரசியல் நிலைமைகள் நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே செல்கின்றன. எனினும் பாகிஸ்தானிய ஜமாஅத்துகள் பொதுவாக தனது நாட்டினுடைய உள்ளூர் கரன்ஸியின் அடிப்படையில் முன்னேற்றம் கண்டுள்ளன. தியாகங்கள் செய்துள்ளன. எங்கெல்லாம் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் சூழல்கள் சீட்கெட்டு உள்ளனவோ அந்த அனைத்து நாடுகளிலும் அல்லாஹ் அமைதியையும் நிம்மதியையும்

## திருக்குர்ஆனிலிருந்து...

நியாயமின்றிப் பூமியில் அகங்காரம் கொள்பவர்களை விரைவிலேயே நான் என் அடையாளங்களிலிருந்து அகற்றி விடுவேன். மேலும் அவர்கள் எந்தவொரு அடையாளத்தைக் கண்டபோதிலும், அவற்றில் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள். (7:147)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

ஏற்படுத்துவானாக. ஏனெனில் அங்குள்ள மக்களுக்கும் அதன் மூலம் பொருள் தியாகத்தில் அதிகமாக பங்கு பெறும் நற்பாக்கியம் கிடைக்கட்டுமாக.

எவ்வாறிருப்பினும் ஒட்டுமொத்த அளவிலுள்ள நிலவரத்தின் அடிப்படையில் வெளிநாடுகளில் ஜெர்மனி முதலிடத்தில் உள்ளது. அதன் பிறகு பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள் உள்ளன. அமெரிக்க மூன்றாம் இடத்திலும், பின்னர் கனடாவும், அதன் பிறகு மத்திய கிழக்கு நாட்டைச் சார்ந்த ஒரு நாடும், அதன் பிறகு இந்தியாவும், பின்னர் ஆஸ்திரேலியாவும், அதன் பிறகு இந்தோனேஷியாவும், பின்னர் கானாவும், அதன் பிறகு மற்றொரு மத்திய கிழக்கைச் சார்ந்த நாடும் வந்துள்ளது. கானாவும் தற்போது ஆஃப்ரிக்க நாடுகளுடனான போட்டிகளை கடந்து உலகின் ஏனைய நாடுகளுடன் பொருள் தியாகத்தின் போட்டியில் பங்கு பெற்று விட்டது. அதாவது அமெரிக்காவும், ஐரோப்பாவும், ஏனைய நாடுகளுடன் போட்டி போடுவதைப்போன்று போட்டி போடுகிறது.

இதேபோன்று தனி நபர் சந்தாவின் அடிப்படையில் சுவிட்சர்லாந்து முதலிடத்தில் உள்ளது. பிறகு அமெரிக்காவும், பிறகு சிங்கப்பூர் உள்ளது. மூன்று ஜமாஅத்துகள் இவையாகும். ஏனைய ஜமாஅத்துகளின் விவரம் பிறகு கூறப்படும்.

ஆஃப்ரிக்க நாடுகளின் ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் சிறந்த ஜமாஅத்துகளின் விவரங்கள்: முதலிடம் கானா, பிறகு நைஜீரியா, பிறகு ஃபுர்கினோஃபாஸோ, பிறகு கேம்பியா, அதன் பிறகு சிராலியோன் ஆகிய ஜமாஅத்து ஆகும்.

சிராலியோன் ஜமாஅத் மிகவும் பெரிய மற்றும் பழைய ஜமாஅத் ஆகும். அங்குள்ள ஜமாஅத்தின் அமீர் சாஹிப் மற்றும் சம்பந்தப்பட்ட பொறுப்பாளர்கள் இன்னும் முயற்சி செய்ய வேண்டும். சரியான முறையில் பொருள் தியாகம் தொடர்பாக ஜமாஅத் உறுப்பினர்களுக்கு கவனமூட்டினால் ஜமாஅத் உறுப்பினர்கள் பொருள் தியாகம் செய்வதற்கு ஆயத்தமாகவே இருக்கின்றனர். எனவே அவர்களுக்கு கவனமூட்ட வேண்டும்.

அதன் பிறகு பெனின் நாடு இடம் பிடித்துள்ளது. பெனின் நாட்டிலும் அல்லாஹ்வின் அருளால் நல்ல முயற்சி செய்யப்பட்டுள்ளது. நைஜீரியா மற்றும் பெனின் நாடுகளில் தனி நபர் சந்தா ரீதியில் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பெனின் நாட்டில் தனி நபர் சந்தா செலுத்துபவர்களின் எண்ணிக்கை உள்ளூர் கரன்ஸியின் அடிப்படையில் 6 மடங்கு அதிகரித்துள்ளது. நைஜீரியாவில் 8 மடங்கு அதிகரித்துள்ளது.

சூழலின் காரணமாக பங்கு பெறுபவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தபோதிலும் ஒட்டுமொத்த தொகை கடந்த ஆண்டை விட கூடுதலாகவோ அல்லது சமமாகவோ உள்ளது. பங்கு பெறக்கூடியவர்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கை 16 லட்சத்து 800 ஆகும். இதில் குறிப்பிடத்தகுந்த ஆஃப்ரிக்க நாடுகளில் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டை ஒப்பிடும்போது இந்த ஆண்டு கானா முதலிடத்தில் உள்ளது. அதன் பிறகு ஃபுர்கினோஃபாஸோ, மாலி, செனிகல், கேம்பியா, காங்கோ கன்ஷாஷா, தன்ஸானிய்யா, லைபீரியா, கென்யா, சென்ட்ரல் ஆப்ரிக்கா, சவுதோமே, காங்கோ, பிரேஸில், ஜிம்பாவே ஆகிய நாடுகள் முறையே இடம் பெற்றுள்ளன.

மற்ற பெரிய ஜமாஅத்துகளில் பங்களாதேஷ், ஜெர்மனி, கனடா, இந்தியா, ஆஸ்திரோலியா, பிரிட்டன் ஆகிய நாடுகளிலும் பங்கு பெறுபவர்களின் எண்ணிக்கை போதுமான அளவு அதிகரித்துள்ளது. அல்லாஹ்வின் அருளால் முதல் பதிவேட்டில் 5927 நபர்கள் உள்ளனர். அதில் 33 நபர்கள் உயிருடன் உள்ளனர். அவர்கள் தனது சந்தாவை தானே செலுத்தி வருகின்றனர். மேலும் மீதமுள்ள 3119 நபர்கள் சார்பாக அவர்களின் வாரிசுகள் மூலமாக சந்தா செலுத்தப்பட்டு வருகின்றது. மீதமுள்ள 2775 நபர்களின் கணக்குகள் கலப்பற்ற ஜமாஅத் சகோதரர்கள் சார்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

முழு உலகிலும் ஒட்டு மொத்த அளவில் ஜெர்மனி முதலிடம் பிடித்துள்ளது. எனவே முதலில் ஜெர்மனியின் விவரங்களே கூறப்படும். ஜெர்மனியின் முதல் பத்து ஜமாஅத்துகள்: மெஹ்தியாபாத், கோயிடுமார்க், நோயிஸ், நைதா, கோலோன், கனேபர்க், அவ்ஸ்னாபுரோக், ஃப்ளோர் ஸகாயிம், கீள், பிரன்ஸ்ஹாயிம்.

உள்ளூர் அமாரத்துகளில் ஹம்பர்க், டிட்சன்பாஹ், பிரான்க்ஃபர்ட், குரோஸ்கேராவ், வேஸ்பாதன், மோர் ஃபெல்டன், மன்ஹாயிம், ரெட்ஷெட், ரோஸல்ஸ், ஹாயிம், டாம்ஷெட் ஆகிய ஜமாஅத்துகள் ஆகும்.

இதன் பிறகு இரண்டாம் இடத்திலுள்ள இங்கிலாந்து ஜமாஅத்துகளின் முக்கிய இடங்கள் இவ்வாறாகும். பைத்துல் ஃபுதூஹ் மண்டலம் முதலிடத்தில் உள்ளது. அதன் பிறகு முறையே மஸ்ஜிது ஃபஸல் மண்டலம், இஸ்லாமாபாத் மண்டலம், பிறகு மிடில் லேண்ட்ஸ் மண்டலம், பைத்துல் இஹ்ஸான் ஆகிய மண்டலங்கள் ஆகும்.

ஒட்டுமொத்த சந்தாவின் அடிப்படையில் இங்கிலாந்தின் பத்து ஜமாஅத்துகளின் விவரங்கள்: ஆல்டர்ஷாட், இஸ்லாமாபாத், மஸ்ஜிது ஃபஸல், ஒஸ்டர்பார்க், பர்மிங்கம் சவுத், ஜில்லிங்கம், புட்டினி, சவுத் சீம், பர்மிங்கம் வெஸ்ட் மற்றும் சீம் ஆகிய ஜமாஅத்துகள் ஆகும்.

ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் இங்கிலாந்தின் ஐந்து சிறிய ஜமாஅத்துகள்: வேலி, ஸ்பென்கீத்வி, சிரோலியோன், ஸ்வான்சீ, நார்த்வேல்ஸ், நார்த் தாம்ப்டன்.

இப்போது நான் பாகிஸ்தான் ஜமாஅத்துகளை குறிப்பிட்டு விடுகின்றேன். பாகிஸ்தானில் உள்ள ஜமாஅத்துகளின் ஒப்பீடு இவ்வாறு ஆகும். முதலிடத்தில் லாஹூர், இரண்டாம் இடத்தில் ரப்வா, மூன்றாம் இடத்தில் கராச்சி.

மாவட்ட அளவில் அதிக தியாகம் செய்யக்கூடிய பத்து மாவட்டங்கள்: இஸ்லாமாபாத் முதலிடம், பிறகு சியால்கோட், குஜ்ராத், குஜ்ரான்வாலா, ஹைதராபாத், மீர்பூர்காஸ், டோபாடேக் சங், உமர்கோட், சக்வால் கோட்லி. சக்வால் மற்றும் கோட்லி தனித்தனியாக இடம் பெற்றிருக்க வேண்டும். ஏன் இவர்கள் ஒன்றாக இணைத்து எழுதி விட்டார்கள் என்பது தெரியவில்லை. ஒருவேளை இரண்டு ஜமாஅத்துகளும் ஒரே இடத்தை பெற்றிருக்கலாம்.

வசூல் அடிப்படையில் அதிக தியாகம் செய்யக்கூடிய பாகிஸ்தானின் நகர ஜமாஅத்துகளின் விவரம் இவ்வாறாகும்: லாஹூர் டிஃபன்ஸ் அமாரத், ராவல்பிண்டி நகர அமாரத், கராச்சி டர்க்ரோடு அமாரத், லாஹூர் முகல்பூர் அமாரத், லாஹூர் டவுண்ஷிப் அமாரத், கராச்சி அஸிஸாபாத் அமாரத், காரச்சி குல்ஷன் இக்பால் அமாரத், பெஷாவர், கோயிட்டா, டில்லிகேட் அமாரத்.

அமெரிக்காவின் பத்து முக்கிய ஜமாஅத்துகள்: முதலிடம் மேரிலேண்ட், பிறகு லாஸ் ஏஞ்ஜல்ஸ், சிலிகோன்வேலி, சென்ட்ரல் வெர்ஜீனியா, சியாட்டல், ஒஷ்கோஷ், டெட்ராயிடு, ஷிகாக்கோ, சவுத் வெர்ஜீனியா, ஹோஸ்டன், அட்லாண்டா, போஸ்டன் ஆகிய ஜமாஅத்துகள் ஆகும்.

ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் கனடாவின் உள்ளூர் அமாரத்துகள்: வான், பீஸ் வில்லேஜ், கேல்கரி, வான்கூவர், ரொடண்டோ வெஸ்ட், மிஸஸ் சாரா, பிரெம்டென் வெஸ்ட், சிஸ்காடுன், டொராண்டோ ஆகிய ஜமாஅத்துகள்.

கனடாவின் சிறிய ஜமாஅத்துகள்: பிராட்ஃபோர்ட், ஹேட்மில்டன், மவுண் டைன், எரட்மின்டன் வெஸ்ட், ரெஜைனா, ஹேமில்டன் ஈஸ்ட் ஆகிய ஜமாஅத்துகள் ஆகும்.

இந்தியாவின் முதல் பத்து ஜமாஅத்துகள்: கோயம்புத்தூர் முதலிடம், பிறகு முறையே கருளாயி, காதியான், பத்தபிரியம், ஹைதராபாத், கன்னூர் டவுண், கொல்கத்தா, கோழிக்கோடு, பெங்களூர் மற்றும் மாத்தோட்டம்.

முதல் பத்து மாநிலங்கள்: கேரளா முதலிடம், பிறகு முறையே தமிழ்நாடு, கர்நாடகா, ஜம்மு காஷ்மீர், தெலுங்கானா, பஞ்சாப், ஒடிசா,

பங்கால், டெல்லி மற்றும் மஹாராஷ்டிரா.

ஆஸ்ரிரேலியாவின் முதல் பத்து ஜமாஅத்துகள்: மெல்பர்ன் லாங்வாரன், காஸில்ஹில், மெல்பர்ன், பேரூக், மார்ஸ்டன் பார்க், அடிலைட் சவுத், பீன்ரெத், ஏஸிடி கேம்ரா, அடிலைட் வெஸ்ட், மவுண்ட் டிராய்ட், பேராமாட்டா. இவை அனைத்தும் ஜமாஅத்தின் ஒப்பீடுகள் ஆகும்.

அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் அவர்களின் செல்வத்திலும் வாழ்நாளிலும் எண்ணற்ற பரக்கத்துகளை வழங்குவானாக. மேலும் அவர்களின் தியாகங்களை ஒப்புக் கொள்வானாக.

இத்துடன் நான் கூறியதுபோன்று தஹ்ரீகே ஜதீதின் 87 வது ஆண்டிற்கான அறிவிப்பையும் செய்து விடுகின்றேன். அது நவம்பர் 1 ஆம் தேதி முதல் ஆரம்பமாகி விட்டது. இன்ஷா அல்லாஹ்.

நான் இப்போது இதன் பக்கம் கவனமூட்ட விரும்புகின்றேன். அதாவது இன்றைய நாட்களில் மிகவும் துஆக்களுக்கான அவசியம் உள்ளது. துஆக்களின் பக்கம் கவனம் செலுத்துங்கள். நாம் நமக்காகவும் நமது ஜமாஅத்திற்காகவும் துஆ செய்கின்றோம். முஸ்லிம்களுக்காக பொதுவாக துஆவிற்கான தேவையும் உள்ளது. இன்றைய நாட்களில் முஸ்லிம்களுக்கு எதிராக முஸ்லிம் அல்லாத சில நாடுகளின் தலைவர்கள் மிகவும் அதிகமான பகைமை மற்றும் காழ்ப்புணர்ச்சியின் உணர்வை கொண்டவர்களாக இருக்கின்றார்கள். இந்த ஜனநாயக காலகட்டத்தில் தலைவர்கள் பொது மக்களை இறைவனாக கருதி அவர்களின் ஆசைகளுக்கேற்ப அறிக்கைகள் கொடுக்கின்றனர். மேலும் அதற்கேற்ப பாலிஸிகளை உருவாக்க முயற்சி செய்கின்றனர். அல்லது சில முறை இறைவன் இல்லை; மாறாக, நீங்களே அனைத்தும் ஆவீர்கள் என்ற சிந்தனையின் பக்கம் பொது மக்கள் தலைவர்கள் தவறாக வழிநடத்திச் செல்கின்றனர்.

இவர்கள் வெளிப்படையாக பேச முடியாத இடங்களில் இஸ்லாத்திற்கு எதிராக உள்ளத்தில் கடுமையான வெறுப்பையும், சந்தேகங்களையும் கொண்டுள்ளனர். இவர்களும் பொது மக்களின் ஒரு பெரும் பிரிவினரும் இஸ்லாத்தை பற்றி சரியான புரிதல் இல்லாததன் காரணமாக முஸ்லிம்களுக்கு எதிராக நிற்கின்றனர். எவ்வாறிருப்பினும் நாம் துஆக்களுடன் முயற்சியும் செய்து இஸ்லாத்தின் உண்மைத்துவம் என்ன? என்பதை உலகிற்கு கூற வேண்டும்.

கடந்த நாட்களில் மேற்கத்திய தலைவர்களில் மிக வெளிப்படையாக ஒருவரின் அறிக்கை வந்துள்ளது. பொதுவாக எதாவதொரு வகையில் மறைமுகமாக, சுற்றி வளைத்து அரசியல் அறிக்கைகள் வருவதுண்டு. எனினும் மிக வெளிப்படையாக ஒரு தலைவரின் அறிக்கை வந்துள்ளது என்றால் அது பிரான்ஸ் நாட்டின் அதிபரின் அறிக்கையாகும். அவர் இஸ்லாமிய மார்க்கத்தை நெருக்கடிக்கு ஆளான மார்க்கமாக குறிப்பிட்டுள்ளார். நெருக்கடிக்கு ஆளான மார்க்கம் இருக்குமென்றால் அது அவர்களின் சொந்த மார்க்கமாகும். முதலில் அவர்கள் எந்த மார்க்கத்தையும் ஏற்பதில்லை. கிறிஸ்தவ மார்க்கத்தையும் கூட அவர்கள் மறந்து விட்டனர். சிக்கலுக்கு ஆளான மார்க்கம் அதுவே ஆகும். இஸ்லாம் என்பது அல்லாஹ்வின் அருளால் உயிருள்ள மார்க்கமாகும். மேலும் பல்கிப் பெருகும் மார்க்கமாகும். கனிகளை வழங்கிக் கொண்டிருக்கும் மார்க்கமாகும். எல்லா காலகட்டத்திலும் அதன் பாதுகாப்பின் பொறுப்பை இறைவன் தானே ஏற்றிருக்கின்றான். இக்காலத்திலும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் மூலமாக அதன் பிரச்சாரம் உலகின் நான்கு மூலைகளிலும் பரவிக் கொண்டிருக்கின்றது.

உண்மையில் விஷயம் என்னவென்றால், இஸ்லாத்தின் எதிர் சக்திகள் அல்லது இந்த மக்கள் முஸ்லிம்களிடத்தில் ஒற்றுமை இல்லை என்பதை நன்கு அறிந்துள்ளனர். அதன் காரணமாகவே இதுபோன்ற செயல்களை செய்கின்றனர். அல்லது அறிக்கைகள் கொடுக்கின்றனர். இங்கு நான் கனடா நாட்டுப் பிரதமரை நிச்சயம் பாராட்டும் வகையில் குறிப்பிட விரும்புகின்றேன். அவர்கள் பிரான்ஸ் நாட்டு அதிபரின் அறிக்கைக்கு பதிலாக மிகவும் நல்ல அறிக்கை ஒன்றை கொடுத்துள்ளார்கள். அதில் இவை அனைத்தும் தவறாகும். இவ்வாறு செய்யக்கூடாது. ஒருவர் மற்றவரின் உணர்வுகளையும், மார்க்கப் பற்றையும், மார்க்க தலைவர்களின் கண்ணியத்தையும் கருத்தில் கொண்டு நடக்க வேண்டும் என்று அன்னார் கூறியுள்ளார்கள். உலகின் மற்ற நாட்டின் தலைவர்களும் கனடா நாட்டின் பிரதமரின் சிந்தனை மற்றும் அறிக்கையை சற்று சீர்தூக்கிப் பார்ப்பவர்களாக இருந்து உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்காக செயல்படுபவர்களாக இருக்க வேண்டுமே!

எவ்வாறிருப்பினும் கனடா நாட்டு பிரதமர் இந்த வகையில் பாராட்டுக்குரியவர். அவருக்காக நாம் துஆவும் செய்ய வேண்டும். அல்லாஹ் அவரது உள்ளத்தை மேலும் திறப்பானாக. எவ்வாறிருப்பினும் முஸ்லிம்களிடம் ஒற்றுமை இல்லை என்பது வெளிப்படையாகும். அதன் காரணமாக இவை அனைத்தும் நடைபெறுகின்றன. முஸ்லிம்களின் ஒவ்வொரு நாடும் மற்றொரு நாட்டிற்கு எதிராக உள்ளது. முஸ்லிம்களிடம் பிரிவினை உள்ளது என்பதை வெளிஉலகிற்கு வெளிப்படுத்தி விட்டது. ஒற்றுமை இல்லை என்பது வெளிப்பட்டு விட்டது.

முஸ்லிம்கள் ஓரணியில் இருக்கின்றார்கள். ஓர் இறைவனையும், ஒரு தூதரையும் ஏற்றுக் கொண்டவர்களாக உள்ளார்கள். அதற்காக தியாகங்கள் செய்யக்கூடியவர்கள் முஸ்லிம்கள் என்பதை உலகம் அறிந்திருந்தால் முஸ்லிம் அல்லாத உலக நாடுகள் புறமிருந்து இதுபோன்ற செயல்கள் ஒருபோதும் வெளிப்பட்டிருக்காது. ஒருபோதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கேலிச் சித்திரத்தை வெளியிடும் தைரியம் எந்த பத்திரிகைக்கும் வந்திருக்காது. சில ஆண்டுகளுக்கு முன்பாகவும் டென்மார்க் மற்றும் பிரான்ஸில் இதேபோன்று கேலிச்சித்திரம் வரையப்பட்டது. தற்காலிகமாக கூச்சல் செய்து அவர்களின் பொருட்களை புறக்கணிக்க வேண்டும். அதனை வாங்கக்கூடாது என்ற அறிவிப்பை செய்து விட்டு மற்றவர்கள் அமைதியாகி விட்டனர். சில மாதங்களில் அவர்கள் மௌனமாகி விட்டனர். அப்போதும் கூட அஹ்மதிய்யா ஜமாஅத்துதான் சரியான எதிர்வினை ஆற்றியது. அவர்களுக்கு மத்தியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய வாழ்க்கை வரலாற்றை எடுத்து வைத்தது. அதனை கல்வியறிவு படைத்த ஏராளமான பிரிவினரும், அந்நிய தலைவர்களும், பொது மக்களும் பாராட்டினர். மேலும் அதனை மிகவும் விரும்பினர்.

நாம் இன்றும் இதே பணியைதான் செய்து வருகின்றோம். சில பெயர்தாங்கி நபர்கள் இஸ்லாத்தின் பெயரால் செய்த தவறான செயல்களுக்கு இஸ்லாத்தின் பெயரை கொடுக்காதீர்கள். ஒரு நபரின் தவறான செயலுக்கு இஸ்லாமிய போதனையின் பெயரை கொடுத்து அதனை முஸ்லிம்களுக்கு பிரச்சனைக்கான காரணமாகவும் ஆக்கி பின்னர் தனது மக்களை அவர்களுக்கெதிராக கிளர்ந்தெழச் செய்வதும் இது அவர்களுக்கெதிரான நமது போர் ஆகும். இதனை நாம் தொடர்வோம் என அறிவிப்பதும் ஒரு நாட்டின் அதிபரின் வேலை அல்ல. அந்த நபரை தவறான செயல் செய்யும்படி தூண்டி விடுபவர்களும் இவர்களாகவே இருக்கின்றனர்.

நான் இதற்கு முன்பும் அறிக்கையில் கூறியுள்ளேன். இதுபோன்று கேலிச்சித்திரம் வரைவது அல்லது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கேலி செய்கின்ற செயல்கள் எந்த வடிவில் இருப்பினும் அதனை தன்மானம் கொண்ட எந்த முஸ்லிமும் சகித்துக் கொள்ள மாட்டார். சில முஸ்லிம்களின் உணர்வுகளை இதுபோன்ற செயல்கள் கிளர்ந்தெழச் செய்கின்றன. அவர்களுக்கு ஆத்திரமூட்டுகின்றன. இதன் மூலம் எவராவது ஒருவர் சட்டத்திற்கு எதிராக சில செயல்களை செயல்தால் அல்லது எவராவது ஒருவர் சட்டத்தை தன் கையில் எடுத்துக் கொண்டால் அதற்கு பொறுப்பு முஸ்லிம் அல்லாத இந்த மக்களும், அரசாங்கங்களும் அல்லது பெயர் அளவிலான கருத்து சுதந்திரமுமே ஆகும். இதுபோன்ற செயல்களுக்கு கருத்து சுதந்திரம் என்று பெயர் கொடுக்கப்படுகிறது.

EDITOR
Moulavai.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavai. ABDUR RAHMAN THAIR
Mobile : + 91 96774-14441
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 10 December 2020 Issue No. 50

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

எவ்வாறிருப்பினும் முஸ்லிம் அல்லாத உலகம் முஸ்லிம்களின் உணர்வுகளை இவ்வாறு தூண்டி விடுகின்றன. நான் முதன் முறையாக இந்த விவகாரம் எழுந்தபோதும் குத்பாக்களின் ஒரு தொடரில் சரியான எதிர்வினையை விளக்கியிருந்தேன். அதில் நாம் எவ்வாறு எதிர்வினை ஆற்ற வேண்டும் என்பதை கூறி இருந்தேன். நான் கூறியதுபோன்று அதனால் மக்கள் மீது நல்ல தாக்கம் ஏற்பட்டது. இன்று வரை நாம் தொடர்ந்து அந்த முயற்சிகளை செய்து வருகின்றோம். அதே வழிமுறைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

பின்னர் ஹாலந்து நாட்டின் அரசியல்வாதி ஒருவர் அறிக்கை ஒன்றை கொடுத்திருந்தார். அப்போது நான் ஹாலந்தில் குத்பா ஒன்று கொடுத்தேன். மேலும் அல்லாஹ்வின் தண்டனையைக் கொண்டு அவரை எச்சரித்திருந்தேன். அப்போது அவர் நான் கொலை மிரட்டல் விடுப்பதாக ஹாலந்து நாட்டின் அரசாங்கத்திடம் புகார் செய்தார். மேலும் நான் இங்கு வருவதை தடை செய்ய வேண்டும் என்று எனக்கு எதிராக ஹாலந்து நாட்டின் அரசாங்கத்திடம் கூறினார். இன்னும் சொல்லப்போனால், இதன்மீது வழக்கு தொடர வேண்டும் என்றும் கூறினார். ஆக எவ்வாறிருப்பினும் நம்மால் இயன்ற வரை சட்டத்தின் வட்டத்திற்குள் இருந்து கொண்டு இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தஸ்திற்கு எதிராக நிகழும் செயல்களுக்கு பதிலளிக்கின்றோம். பதிலளித்துக் கொண்டும் இருப்போம். அதன் தாக்கமும் ஏற்படுகின்றது. சட்டத்தின் வட்டத்தில் இருந்து கொண்டு ஒவ்வொரு அடியையும் நாம் எடுத்து வைக்க வேண்டும்.

மேலும் எல்லாவற்றையும் விட அதிகமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓத வேண்டும். மேலும் துஆ செய்ய வேண்டும். இவற்றையே இதற்கு தீர்வாக நாம் முன் வைக்கின்றோம். கடந்த பல குத்பாக்களில் இதன் பக்கம் நான் கவனமூட்டி இருக்கின்றேன். நமக்கு எதிராக அஹ்மதி அல்லாத உலமாக்கள் கடுமையான அறிக்கைகளை வழங்கி வருகின்றனர். இருப்பினும் இஸ்லாத்தின் பாதுகாப்பிற்காக நாம் இஸ்லாத்தின் உண்மையான போதனையின் ஒளியில் நாம் நமது பணிகளை செய்து கொண்டே செல்வோம். மேலும் செய்து கொண்டே இருக்கின்றோம். இன்ஷா அல்லாஹ்.

ஒன்று அல்லது இரண்டு நான்கு நபர்களை கொலை செய்வதன் மூலமாக தற்காலிக உணர்வுகள் தணிந்து விடலாம். ஆனால் இது ஒன்றும் நிரந்திர தீர்வு கிடையாது. முஸ்லிம் சமுதாயம் நிரந்தரமான தீர்வை விரும்புகின்றது என்றால் அனைத்து முஸ்லிம் உலகமும் ஒன்றுபட வேண்டும். இப்போதும் கூட பிரான்ஸ் அதிபரின் அறிக்கைக்கு பதிலாக துருக்கி நாட்டின் அதிபர் பதிலளித்தார். அல்லது மேலும் ஒன்றிரண்டு நாடுகள் எதிர்வினை ஆற்றின. எனினும் அனைத்து முஸ்லிம் நாடுகளும் ஓரணியில் நின்று எதிர்வினையாற்றும்போது ஏற்படும் தாக்கத்தை அந்த அறிக்கைகள் ஏற்படுத்த முடியாது.

துருக்கி நாட்டின் எதிரிவினையினால் பிரான்ஸ் நாட்டின் அதிபர் தனது கூற்றை மாற்றிக் கொண்டதாகவும், தான் கூறியதன் பொருள் இவ்வாறல்ல. மாறாக, இவ்வாறாகும் என்று கூறியதாக கூறப்படுகிறது. எனினும் அவர் அத்துடன் நாங்கள் என்ன செய்கின்றோமோ சரியாகவே செய்கின்றோம் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக நிற்கின்றார். ஆனால் **54,55** முஸ்லிம் நாடுகள் ஒரே குரலில் ஒலித்திருந்தால் பிரான்ஸ் அதிபர் மழுப்பியிருக்க மாட்டார். மேலும் மன்னிப்பு கேட்டு மண்டியிடும் நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டிருக்கும்.

எவ்வாறிருப்பினும் நான் சுருக்கமாக இதனையே கூற விரும்பினேன். நீங்கள் துஆ செய்யுங்கள். முஸ்லிம் நாடுகள் குறைந்தபட்சம் அந்நியர்களுக்கு முன்னால் ஒரே குரலாக ஒலிக்கட்டும். பின்னர் அது எவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை பார்க்கட்டும். நாம் நமது பணிகளை செய்து கொண்டே இருக்கின்றோம். செய்து கொண்டே இருப்போம். இன்ஷா அல்லாஹ்.

முஹம்மதிய்ய மஸீஹை ஏற்றுக் கொண்டவர்களின் பணி மற்றும் கடமை என்னவென்றால், இஸ்லாத்தின் அழகிய போதனையை உலகத்தில் பரப்ப வேண்டும் என்பதாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முகத்தை உலகத்திற்கு முன்னால் காட்ட வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் முழு உலகமும் வந்துவிடாதவரை நாம் நிம்மதி பெருமூச்சு விடக்கூடாது. ஏக இறைவனை அடையாளங்கண்டு அநீதிகளை முடிவுக்கு கொண்டு வருவதன் மூலம்தான் நீங்கள் தப்பிக்க முடியும் என்பதை நீங்கள் உலகிற்கு கூற வேண்டும். சில காலத்திற்கு முன்பாக நான் உலக அரசாங்கங்களின் அதிபர்களுக்கு கடிதம் எழுதியிருந்தேன்.

சில மாதங்களுக்கு முன்பு இதே கோவிட் காலகட்டத்தில் பிரான்ஸ் அதிபருக்கும் நான் கடிதம் எழுதியிருந்தேன். அதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சொற்களில் இந்த எச்சரிக்கையும் செய்திருந்தேன். அதாவது இந்த தண்டனைகளும், ஆபத்துகளும் அல்லாஹ்வின் புறமிருந்து அநீதிகளின் காரணமாக வருகின்றன. எனவே இதன் பக்கம் நீங்கள் கவனம் செலுத்துவது அவசியமாகும். அநீதிகளுக்கு முடிவு கட்டுங்கள். நீதியை நிலைநாட்டுங்கள். உண்மையை அடிப்படையாகக் கொண்டு பேசுங்கள் என்றும் கூறியிருந்தேன். நாம் நமது கடமையை முழுமை செய்து விட்டோம். முழுமை செய்து கொண்டும் இருப்போம். இனி எவர் விரும்புகின்றாரோ அவர் அதை புரிந்து கொள்ளட்டும். அல்லது புரியாமல் இருக்கட்டும். எனினும் நாம் எல்லா நிலையிலும் முஸ்லிம் சமுதாயத்தை நமது துஆக்களில் மறக்கக் கூடாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை அடையாளங்கண்டு கொள்ளும் நற்பாக்கியத்தை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக.

பொதுவாகவும் உலகம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதுபோன்ற விஷயங்களின் மூலம் அவர்கள் இறைவனை விட்டு விலகிக் கொண்டே சென்றால் பிறகு அழிவைத் தவிர அவர்களுக்கு வேறு எதுவும் இருக்காது. உலகத்தை அல்லாஹ்வின் ஏகத்துவத்தின்கீழ் கொண்டு வருவதற்காக நாம் பொதுவாக முயற்சி செய்ய வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியின்கீழ் கொண்டு வர வேண்டும். இதுதான் தஹ்ரீகே ஜதீதின் நோக்கமும் ஆகும். அல்லாஹ் நமக்கு அதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. அது மட்டுமல்லாமல் உலகத்தின் பொதுவான நிலைமைகளுக்காகவும் துஆ செய்யுங்கள். இவர்கள் மிக வேகமாக அதன் பக்கம் முன்னேறிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த தொற்று நோயிலிருந்து வெளியேறிய பிறகு மற்றொரு ஆபத்து உலகப் போரின் வடிவில் அவர்கள் மீது இறங்கிவிட கூடாது. அல்லாஹ் உலகிற்கு அறிவையும், புரிதலையும் வழங்குவானாக. மேலும் ஏக இறைவனை அடையாளங்கண்டு கொண்டு அவனுக்குரிய உரிமைகளை வழங்குபவர்களாக ஆக்குவானாக.

**தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad